நித்திய ஜீவன் பெறுதல்

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்

ஏறக்குறைய 7 ஆண்டுகளாக பல இடங்களிலிருந்து சேகரித்த சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு வரை அச்சடிக்கப்பட்ட, ஆரோக்கிய உபதேசங்கள் அடங்கிய, கிறிஸ்தவ ஆவிக்குரிய புத்தகங்களை, பல மணி நேரம் கொடுத்து, பல இலட்சங்கள் செலவு செய்து மின் நூல்களாக (E-Books) இலவசமாக (மத்தேயு 10:8) உங்கள் கரங்களில் கொடுப்பதற்கு, அற்பரும் நீசருமான எங்களை பயன்படுத்தின உன்னத தேவனுக்கே சகல கனமும் மகிமையும் துதியும் உரித்தாவதாக. இதைப் போன்ற இன்னும் ஆயிரக்கணக்கான புத்தகங்களை தரவிறக்கம் (Download) செய்ய எங்களுடைய இணையதளத்தை சொடுக்கவும்/பார்க்கவும்: www.WordOfGod.in

95 சதவீத புத்தகங்கள் அச்சில் இல்லாதவைகளும், காப்புரிமை முடிந்தவைகளுமே. மீதமுள்ள புத்தகங்கள், நல்ல உபதேசங்களை கொண்டிருப்பதால், முடிந்தவரை ஆசிரியரின் உரிமையோடு மின்-நூலாக, இலவசமாக வெளியிடுகிறோம். ஒருவேளை உங்களுடைய புத்தகம் இப்படி இலவசமாக மின்-நூல் (E-Book) வடிவில் வரக்கூடாது என்று நினைத்தீர்களானால், தயவு செய்து எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள். எங்களுடைய WhatsApp எண்ணிற்கோ, மின் அஞ்சலிலோ (Email) எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உடனடியாக எங்களுடைய இணைய-தளத்திலிருந்து எடுத்துவிடுகிறோம்.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

Wishing you in the mighty name of Jesus Christ

We had collected several thousands of old Tamil Spiritual Books which are rich in Sound Doctrines across various places of India for 7 years. Some of them are more than 200 years old books. We have spent millions of hours and money in scanning them and coverting them to E-Books. The work is still in progress. These E-books are published completely free of cost (Matt 10:8) forever. We give all the praise and glory to God for giving this wonderful opportunity to server Him. You can download thousands of similar Tamil Christian E-books from our website www.WordOfGod.in completely free of cost at any time.

95% of these E-Books are not being printed now and their copyrights are already expired. The remaining books are sent as E-Books mostly with the permission from the Authors. If you feel that your books should not be published as E-Book freely, kindly execuse and forgive us. Please let us know the book details by WhatsApp or Email we will remove them from our website.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

நித்திய ஜீவன்

Pr. J. லாசர்

Praise the Lord

FULL GOSPEL PENTECOSTAL CHURCH

Estd. 1933 H.O. Kadamalaikuntu Reg. S.No. 64/95

P.B. - 3, Mekkamandapam - 629 166, K.K. District

கடமலைக்குன்று

08.10.08

நித்திய ஜீவனை பெற்றுக் கொள்வது எப்படி? என்று Pr. J. லாசர் அவர்கள் எழுதின புத்தகம் உங்கள் கரங்களில் கிடைக்கச் செய்த தேவனுக்கு ஸ்தோத்திரம்!

நம்மை உருவாக்கின தேவன் நாம் கெட்டுப் போகாமல் நித்திய ஜீவனை அடையவேண்டுமென்று விரும்புகிறார். இப்புத்தகம் நித்திய ஜீவனைப் பெற பரிசுத்த வேதாகமம் காட்டும் வழியை நமக்கு எடுத்துரைக்கிறது. கருத்தாய் வாசியுங்கள். பிறருக்கு அறிமுகம் செய்யுங்கள்.

பாஸ்டர் J. லாசர் அவர்களுக்காக ஜெபியுங்கள். தொடர்ந்து நல்ல விசேஷங்கள் அவருடைய எழுத்தாணியிலிருந்து புறப்பட கர்த்தர் கிருபை செய்வாராக!

அல்லேலூயா!

அன்புடன்

I. வினில் சதீஷ்

Pastor & President

Full Gospel Pentecostal Church

நித்திய ஜீவனை பெற்றுக்கொள்கிறது எப்படி?

மனந்திரும்புதல்

பாவியான மனிதன், நான் பாவி என்று உணர்ந்து பாவத்தை அறிக்கையிட்டு விட்டு விடும் போது ஆத்துமாவை உயிர்ப்பிக்கிறார், எபே. 2.1 ஆத்தும ஜீவனைப் பெற்ற மக்கள் இந்த ஜீவன் நாளுக்கு நாள் பெருகி வரவேண்டும். இப்படி எல்லோரும் ஆத்துமாவில் ஜீவன் பெற்றுக் கொள்ள இயேசு நமக்காக ஜீவனைக் கொடுத்தார். திருடன் திருடவும் கொல்லவும் அழிக்கவும் வ நகிறானே அன்றி வேறு ஒன்றுக்கும் வரான் நானோ ஆ வைகளுக்கு ஜீவன் உண்டாயிருக்கவும் அது பரிபூரணப்படவும் வ தேன், யோவான் 10.10.

ஞானஸ்நானம்

இயேசு சொல்லும் போது விசுவாசமுள்ளவனாகி ஞானஸ் னம் எடுக்கும் போது இரட்சிக்கப்படுவான். மேலும் பிதாவின் மகிமையினாலே கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டது போல மும் புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்துக் கொள்ளும் படிக்கு அவருடைய மரணத்திற்குள்ளாக்கும் ஞானஸ்நானத்திலே கிறிஸ்து வுடனே கூட அடக்கம் பண்ணப்பட்டோம். இந்த அனுபவத்தை பார்க்கும் போது ரோமர் 4 ம் வசனம் இதிலே ஒரு புதிய ஜீவன் இருக்கிறது இரட்சிப்பைப் பெற்ற தேவப்பிள்ளைகள் ஞானஸ்ஞானம் எடுக்காவிட்டால் இந்த புதிய ஜீவன் கிடையாது. இரட்சிப்பு ஜீவனோடு நின்று போகிறது.

அபிஷேகம்

பரிசுத்தாவியின் அபிஷேகம் பெற்றுக்கொள்ளும் போது இதை விட அதிகமான ஜீவனைப்பெற்றுக் கொள்கிறார்கள். இயேசு சொல்லும் போது என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ அவன் உள்ளத்திலிருந்து ஜீவத்தண்ணீருள்ள நதிகள் ஓடும் என்றார். தேவபிள்ளைகள் அனுதினமும் காத்திருந்து புதிய அபிஷேகம் பெற்றுக்கொள்ளும் போது நம் ஆத்மீக ஜீவன் பெருகிக் கொண்டிருக்கும். தன்னை தாழ்த்தி பரிசுத்த ஆவியானவருக்கு கீழ்ப்படியும் போது ஜீவன் நமக்கு தன்னை பெருகிவரும் மாமிசத்தையுடைய்வர்களாயி மாமிசத்தின் படி நடக்கும் போது ஜீவன் குறைய ஆரம்பிக்கிறது. ஆவியின் சிந்தை ஜீவனும் சமாதானமுமாக ரோ. 8 :6 அன்றியும் மாமிசத்தின் படி நடக்கிறவர்கள் மாமிசத்துக்குரியவைகளை சிந்திக்கிறார்கள் ஆவியின் படி நடக்கிற வர்கள் ஆவிக்குரியவைகளைக் சிந்திக்கிறார்கள். ரோ. 8:5. உபா. 30 அதிகாரம் 20 -ஆம் வசனம் சொல்லும் போது உன் தேவனாகிய கர்த்தரில் அன்பு கூர்ந்து அவர் சத்தத்திற்கு செவிகொடுத்து அவரைப்பற்றிக் கொள்வாயாக. அவரே உனக்கு ஜீவனும் தீர்க்காயுசும் என்றார். கர்த்தரை தேடிச்செல்லும் போது என் ஜனங்கள் இரண்டு தீமைகள் செய்தார்கள் ஜீவ தண்ணீர் ஊற்றாகிய என்னை விட்டுவிட்டார்கள் தண்ணீர் நிற்காத தொட்டிகளாகிய வெடிப்புள்ளத் தொட்டிகளை தங்களுக்கு வெட்டி கொண்டார்கள். எரே 2:13

ஜீவனுக்கேதுவான வழி

நாம் பரிசுத்த ஸ்தலத்தில் பிரவேசிக்க இயேசுவானவர் தமது மாமிசமாகிய திரையின் வழியாய் புதிதும் ஜீவனுமான மார்க்கத்தை நமக்கு உண்டுபண்ணினபடியால் அந்த மார்க்கத்தின் வழியாய் பிரவேசிக்க அவருடைய இரத்தத்தினாலே நமக்கு

தைரியம் உண்டாயிருக்கிறது. இயேசு கல்வாரியில் ஜீவனை விடும் போது சூரியன் இருளடைந்தது. தேவாலயத்தின் திரைச்சீலை நடுவில் இரண்டாக கிழிந்தது. நாம் பரிசுத்த ஸ்தலத்தில் பிரவேசிக்க புதிய வழி திறக்கப்பட்டது. உலகத்தில் அனேக மார்க்கங்கள் இருந்தாலும் இயேசுவின் மார்க்கம் ஜீவ வழியாயும், ஜீவனு மாயிருக்கிறது எபி 10 9: 20. தாவீது சொல்லும் போது ஜீவமார்க் கத்தை எனக்கு தெரியப்படுத்துவீர், உம்முடைய சமுகத்தில் பரிபூரண ஆனந்தமும் உம்முடைய வலது பாரிசத்தில் நித்திய பேரின்பமும் உண்டு. இதோ ஜீவனையும் மரணத்தையும் உனக்கு முன்பாக வைத்தேன். போதக சிட்சையே ஜீவவழி. கட்டளையே விளக்கு வேதமே வெளிச்சம் நீதி 6:23. ஜீவ வழியில் இருக்கிறவன் புத்திமதியை காத்துக்கொள்வான். கீழான பாதாளத்தை விட்டு விலகும் படி ஜீவவழியானது விவேகிக்கு உன்னதத்தை நோக்கும் வழியாம் நீதி 15:24. அநித்தியமான பாவ சந்தோஷங்கள் ஆடம்பர உலக சந்தோஷம். நிலம் விளையும் போது கனிகளால் சந்தோஷம் ஏசா 3 :13. துன்மார்க்கனின் கெம்பீரமும் மாயக்காரின் சந்தோஷமும் ஒரு நிமிஷம் மாத்திரம் யோபு 20:4. விருந்திலே சந்தோஷம் இந்த சந்தோஷம் பாதாளம் போகிறது. ஏசாயா 5:14. பாதாளம் வாயை மட்டில்லாமல் திறக்கிறது. அவர்கள் மகிமையும் அவர்கள் திரள் கூட்டமும் அவர்கள் ஆடம்பரமும் அவைகளில் களிகூரு கிறவர்களும் அதற்குள் இறங்கப் போவார்கள் பாதாளத்தில் போய் சேருகிறது. ஆகையால் இந்த பாவ வழிகளை விட்டு மனம் திரும்பி கர்த்தருக்கு நேராய் பரலோகத்தை நினைத்து பாதாள வழியை விட்டு ஜீவவழிக்கு நேராய் வருகிறார்கள் நித்திய சந்தேஷம் அனுபவிப்பார்கள் ஒருவரும் கெட்டு போகாமல் எல்லாரும் மனம்திரும்பி அவருடைய ராஜ்யம் சேரவே. இயேசு சொல்லும் போது நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன். என்னையல்லாமல் ஒருவனும் பிதாவிடத்தில் வரான் யோவா. 14:6

ஏனெனில் பிதாவானவர் தம்மில் தாமே ஜீவனுடையவராயிருக் கிறது போல குமாரனும் நம்மில் தாமே ஜீவனுடையவரா இருக்கும் படி அருள் கொடுத்திருக்கிறார். இதைக் குறித்து ஆச்சரியப்பட வேண்டாம் ஏனென்றால் பிதாவுக்கு பூமியிலுள்ள அனைவரும் அவருடைய சத்தத்தை கேட்கும் காலம் வரும் யோ. 5.26. அப்பொழுது நன்மை செய்தவர்கள் ஜீவனை அடையும் படி எழுந்திருக் கிறவர்களாகவும் தீமை செய்தவர்கள் ஆக்கினை அடையும் படி எழுந்திருக்கிறவர்களாகவும் புறம் கூறுவார்கள். ஆகையினால் இயேசு சொன்னார், மனுஷன் உலகம் முழுவதையும் ஆதாயப் படுத்திக் கொண்டால் அவனுக்கு லாபம் என்ன மத்தேயு 16: 26.

ஆத்தும ஜீவன்

ஞானம் தன்னை உடையவர்களுக்கு ஜீவன் பிரசங்கி 12 கர்த்தருக்கு பயப்படுதல் ஞானத்தின் ஆரம்பம் ஆனால் பரத்திலிருந்து வருகிற ஞானமோ முதலாவது சுத்தம் உள்ளதாயும் பின்பு சமாதானம் சாந்தம் இரக்கம் உள்ளதாயும் இரக்கத்தாலும் நற்கனிகளாலும் நிறைந்த தாயும் பட்சபாதம் இல்லாதாயும் இருக்கிறது யாக்கோபு 3:17. ஞானம் முகத்தை பிரகாசிக்கப் பண்ணும் ஜீவன் ஆத்துமாவில் பெலன் தருகிறது தாவீது சொல்லும் போது கர்த்தர் என் ஜீவனின் பெலனாவர் சங்கீதம் 2 :1. கர்த்தரை கண்டடைகிறவன் ஜீவனை கண்டடைகிறான் கர்த்தருடைய தயவு பெற்றுக் கொள்கிறான். நீதி. 8:35 நித்திய ஜீவனை விரும்பாமல் அழிவுக்குரியவைகளை விரும்பி தேடுகிறார்கள். எவ்வளவு பரிதாபநிலை நன்மையை காணும் படி ஜீவனை விரும்பி நீடித்த நாட்களை அபேட்சிக்கிற மனுஷன் யார்? சங்கீதம் 34:12.

நீதியின் பாதை

என் மகனே என் போதகத்தை மறவாதே உன் இருதயம் என்கட்டளை களைகாக்கக் கடவது. அவைகள் உனக்கு நீடித்த

நாட்களையும் தீர்க்காயு சையும் சமாதானத்தையும் பெருகப் பண்ணும் என் மகனே இவைகள் உன் கண்களை விட்டு பிரியா திருப்பதாக. அவைகள் உன் ஆத்துமாவுக்கு ஜீவனும் உன்கழுத்துக்கு அலங்காரமாயிருக்கும் நீதிமொழிகள் 3:1. ஆத்தும ஜீவனைப் பெற்றுக்கொள்ள மிகவும் பிரயாசப்பட வேண்டும் நீதிமானுடைய பிரயாசம் ஜீவனைபிறப்பிக்கும் நீதி. 10:16. நீதி ஜீவனுக்கு ஏதுவாகிற தாயிருக்கிறது. நீதியின் பாதையில் ஜீவன் உண்டு அந்த பாதையில் மரணம் இல்லை நீதி. 12:28. தேவப்பிள்ளைகள் நீதியின் பாதையில் செல்ல வேண்டும். எவ்வளவோ ஜீவன் பெருகும் நீதியைப்பின்பற்ற வேண்டும் நீதியைப்பின்பற்றுகிறவன் தயயைப்பின் பற்றுகிறவன் ஜீவனையும் நீதியையும் மகிமையும் கண்டடைவான் இது எவ்வளவோ பெரிய பாக்கியம் இது நித்தியமானது. அழிவுக்குரிய காரியங்களை தேடி நாடி நித்தியத்தை இழந்து போகிறார்கள் ஆகையால் நித்திய ஜீவனை பற்றிக் கொள்ளும் படி வருங்காலத்துக்காக தங்களுக்கு நல்ல ஆதாரத்தை பொக்கிஷமாக வைக்கவும் அவர்களுக்குக் கட்டளையிடு 1 தீமோ. 6 :19.

மனந்திரும்புதல்

இயேசு சொல்லும் போது நான் சொல்லுகிற வசனம் ஆவியாயும் ஜீவனாயும் இருக்கிறது. யோவான். 6:63 வேதவாக் கியங்கள் ஆராய்ந்து பாருங்கள் அவைகளால் உங்களுக்கு நித்திய ஜீவன் உண்டென்று எண்ணுகிறார்களே. அப்படியிருந்தும் உங்களுக்கு ஜீவன் உண்டாக என்னிடத்தில் வர உங்களுக்கு மனதில்லை. யோவான் 5:39. தேவனுடைய வார்த்தையானது ஜீவனும் வல்லமையுடையதாயும் இருக்கிறது. மனந்திரும்புதல் முக்கியமாயிருக்கிறது. ஆத்துமஜீவன் பெற்றுக் கொள்வதற்கான மனந்திரும்புதல் வேண்டும். இந்நாட்களில் சரியான மனம்

திரும்புதல் இல்லாதபடியினால் சரியான ஜீவன் பெற்றுக் கொள்ளாமல் இருக்கிறார்கள். புறஜாதியர் வசனம் கேட்டு விசுவாசித்த போது பரிசுத்த ஆவியின் வரம் அருளப்பட்டது.

தாகமாயிருக்கிறவன் வரக்கடவன் விருப்பம் உள்ளவன் ஜீவத் தண்ணீரை இலவசமாய் வாங்கிக் கொள்கிறான். ஆத்துமாவில் தாகம் இருக்கிறது போல பசி இருக்கிறது. ஆத்துமாவுக்கு ஆவிக்குரிய போஜனம் புசிக்கிறது. போல ஆத்துமாவுக்கு ஜீவனும் பெலனும் கிடைக்கிறது. பால் குழந்தைக் கேற்ற ஆகாரம் பலமான ஆகாரம் நன்மை தீமை பகுத்தறிகிறது. எபிரேயர் 5:14.

ஜீவனுக்கேதுவான வாசல்

ஜீவனுக்குள் போகிறவாசல் இடுக்கமும் வழிநெருக்க மாயிருக்கிறது அதை கண்டு பிடிக்கிறவர்கள் சிலர். வசனகட்டுப் பாட்டுக்குள் உபதேச கட்டுபாட்டுக்குள் ஜீவிக்கும் வழி நெருக்க மாயிருக்கும் வேறுபட்டு ஜீவிக்கிறது. வேறுபாட்டின் உபதேசத்திற்குள் முக்கியமாயிருக்கிறது. ஜீவனை காத்துக்கொள்ள தன்னை இரட்சித்துக்கொள்வது, அப். 2: 38. இயேசு சொல்லும் போது நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன் என்றார். உயிர்த்தெழுந்த ஜீவனும் சாயலும் கிடைக்கத்தான் அவருடைய மரணத்தின் சாயலில் இணைக்கப்பட்டவர்களுக்கு உயிர்தெழுந்த சாயலால் இணைக்கப் பட்டிருப்போம். ரோமர், 6:5 அப்போஸ்தலனாகிய பவுலும் சொல்லும் போது கர்த்தராகிய இயேசுவின் ஜீவன் எங்கள் சரீரத்தில் விளங்கும் படிக்கு இயேசுவின் மரணத்தை எப்பொழுதும் எங்கள் சரீரத்தில் சுமந்து திரிகிறோம். இப்படி மரணமானது எங்களிடத்திலும் ஜீவனானது உங்களிடத் திலும் பெலன் செய்கிறது. II கொரிந்தியார் 4:10 நம்முடைய இயேசுவின் ஜீவன் மற்ற ஜனங்களுக்கு

பிரயோஜனப்பட வேண்டும். நம்முடைய ஜீவன் அவருடைய ஜீவனோடு இணையும் போது மற்றவர்களுக்கு பிரயோஜனமாகும்.

ஒப்புரவாகுதல்

யோவான் அப்போஸ்தலன் சொல்லும் போது நாங்கள் கேட்டதும் எங்கள் கண்களில் கண்டதும் நோக்கிப்பார்த்ததும் எங்கள் கைகளில் தொட்டது மாயிருக்கிற ஜீவவார்த்தையை குறித்து உங்களுக்கு அறிவிக்கிறோம். அந்த ஜீவன் பிதாவினிடத் திலிருந்து வெளிப் பட்டதுமான ஆத்து ஜீவனை நாங்கள் கண்டும் அதை குறித்து சாட்சி கொடுத்து உங்களுக்கு அறிவிக்கிறோம். அவர் சொல்லும் போது எங்கள் ஐக்கியம் பிதாவோடும் அவருடையவர்களாகிய எங்களோடும் இருக்கிறது. இந்த ஐக்கியமாக தான் ஜீவன் ஒளியாகவும் வல்லமை யாகவும் இருக்கிறது. நாம் ஒளியில் நடந்தால் ஒருவருக்கொருவர் ஐக்கியப்பட்டிருப்போம். யோவான் 1:7 ஆவியில் ஐக்கியம் நம்மை அழைத்து கிறிஸ்துவோடு ஐக்கியமாக இருக்கத்தான். I கொரிந்தியர் 1:9 பரிசுத்த ஆவியின் ஐக்கியம் அன்னியோன்ய ஐக்கியம் கிறிஸ்துவின் இரத்தத்தின் ஐக்கியம், அப்பம் அவருடைய சரீரத்தின் ஐக்கியம், அவருடைய பாடுகளின் ஐக்கியம், இப்படியாக ஜீவன் வல்லமையாய் பெருகிவரும் இந்த ஐக்கியங்கள். இல்லாவிட்டால் தான் ஜீவன் குறைந்து வருகிறது. வேறுபாடு இல்லாமல் போகும் போது ஜீவன் குறைந்து போகிறது. எபேசியர் 5:14. ஒப்புரவாகிறது. அவர் இயேசு கிறிஸ்துவை கொண்டு நம்மை ஒப்புரவாக்கி ஒப்புரவாக்குதலின் ஊழியத்தையும் உபதேசத்தையும் கொடுக்கிறது. நாம் தேவனுக்கு சத்துருக்காள யிருக்கையில் குமாரனுடைய மரணத்தினால் ஒப்புரவாக்கப்பட்டார்கள், ஒப்புரவாக்கப்பட்டப்பின் நாம் அவருடைய ஜீவனாலே இரட்சிக்கப் படுவது அதிக நிச்சயமாமே ரோமர் 5:10.

ஜீவனாகிய கல்

மனுஷரால் தள்ளப்பட்டதும் தேவனால் தெரிந்து கொள்ளப் பட்டதும் விலைபெறப்பெற்றதுமாகிய ஜீவனுள்ள கல்லாகிய அவரிடத்தில் சேர்ந்தவர் களாகிய நீங்களும் ஜீவனுள்ள கற்களைப்போல அதாவது இயேசுவாகிய கல் சீயோனிலே அஸ்திபாரக் கல்லாயிருக்கிறது. அவரே மூலைக்கு தலைக் கல்லாவார் அது மாத்திரமல்ல இந்த கல் இரும்பையும் வெண்கலத்தையும் மண்ணையும் வெள்ளியையும் பொன்னையும் நொறுக்கி தூளாக்கிப் போட்டது. இந்த கல்பெரியப் பர்வதமாகி உலகத்தையே நிரப்பிப்போட்டது. தானியேல் 4:4 இயேசு உலகத்துக்கு ஒளியாயிருக்கிறார். இயேசு உலகத்தை ஆயிரம் வருடம் அரசாட்சி செய்வார் அவரைப்போல் உள்ளப் பரிசுத்த வான்களும் ஆயிரம் வருஷம் ஆளுகைச் செய்வார்கள். இன்று நாம் பார்க்கும் போது அவருடைய ஜீவன் தேவப்பிள்ளைகளில் குறைபடு கிறபடியால் தேவனுடைய கிரியைகளும் குறைபடுகிறது. தேவப்பிள்ளைகள் ஜீவன் பெற்று அவருடைய கிரியைகளை நடப்பிக்க வேண்டியதாயிருக்கிறது.

ஜீவனில் இணைந்து கொள்ள வேண்டும்

யாக்கோபைப் பார்க்கும் போது உலகபிரகாரம் யாக்கோபின் ஜீவன் இளைய குமாரனோடு இணைந்தது இதைப் போல தான் நம்முடைய ஜீவனும் இயேசுவின் ஜீவனைப்போல் இணைய வேண்டும். அங்கு இயேசுவின் வல்லமை வெளிப்படும் இயேசுவின் சாயல் வெளிப்படும் யாக்கோபின் ஜீவன் இளைய குமாரனோடு இணைந் திருந்தது என்றால் மற்றமக்களை விட அதிகமாய் இளையவனை நேசித்தான் இதைப்போலவே இயேசுவின் ஜீவனோடு இணைந் திருப்பார்கள் உலகத்திலும் உலகத்திலுள்ளவைகளிலும் அன்பு கூராமல் அதிகமாய்

இயேசுவை நேசித்தார்கள். மணவாட்டிச் சொல்லுகிறாள் நான் என் நேசருடையவள் என் நேசர் என்னுடையவர். யோனத்தானும் தன் ஆத்து மாவை போல தாவீதை நேசித்தான். இருவரும் உடன்படிக்கைச் செய்து கொண்டார்கள். யோனாத்தான் தான் போர்த்துக் கொண்டிருந்த சால்வையையும் தன் வஸ்திரங்களையும் தன் பட்டயத்தையும் தன் வில்லையும் தன் கச்சையையும் தாவீதுக்கு கொடுத்தான் தன் ஆத்து மாவைப்போல் இயேசுவை நேசிக்கிறப் பிள்ளைகளுக்கு தன் வஸ்திரங்களையும் தன் மகிமையையும் தமது சிங்காசனத்தில் உட்காரவும் அவரோடு சேர்ந்து ஆளுகை செய்யவும் கிரீடங்களும் கொடுக்கிறார். இயேசுவுக்குரிய எல்லாவற்றையும் கொடுக்கிறார் வெளி 21: 7

கிறிஸ்து எனது ஜீவன்

அப்போஸ்தலனாகிய பவுலின் அனுபவத்தைப் பார்க்கும் போது கிறிஸ்து எனக்கு ஜீவன் என்று சொல்லுகிறார் கிறிஸ்துவானவர் அவர் சரீரத்தில் விளங்க வேண்டும் என்று சொல்கிறார் கிறிஸ்துவுக்கும் விசுவாசிகளுக்கும் ஜீவவார்சனையா யிருக்கிறார். IIகொரி. 2 :14. அவருடைய வாஞ்சை கிறிஸ்து என் சரீரத்தில் மகிமைப்பட வேண்டும். இந்த அற்பமான தம்முடைய மகிமையான சுவிசேஷத்தை தம்முடைய மகிமையான கிறிஸ்துவை பற்றி அப்போஸ்தலன் சொல்லும்போது இயேசு வினுடைய அச்சடையாளங்களை நான் என் சரீரத்திலே தரித்துக்கொண்டிருக்கிறேன். கிறிஸ்து இயேசுவின் ஜீவன் பற்றிய வாக்குத்தத்தம், அவர் மரணத்தை பரிகரித்து ஜீவனையும் அழியாமையும் சுவிசேஷத்தினால் வெளியரங்கமாக்கினார். இயேசுவை பார்க்கும் போது அழியாத ஜீவனுக்குரிய வல்லமை படியே ஆசாரியரானார். எபி. 7:17 பேதுரு அப்போஸ்தலர் சொல்லும் போது அழியாததும் மாசற்றதும் வாடாததுமாகிய சுதந்திரத்துக்கு

ஜீவனுள்ள நம்பிக்கை உண்டாகும் படி தம்முடைய மிகுந்த இரக்கத்தின் படியே நம்மை மறுபடியும் ஜெநிப் பித்தார். ஜீவனுள்ள தேவன் மேல் நம்பிக்கை வைக்க அவர்களுக்கு சகல நன்மைகளையும் சம்பூரணமாயிருக்க கொடுக்கிறார் தீமோ. 6:17.

நம்முடைய ஜீவனாகிய கிறிஸ்து

ஏனென்றால் நீங்கள் மரித்தீர்கள் இந்த சரீரம் பாவத்துக்கு மரிக்க வேண்டும் கிறிஸ்து உங்களில் இருந்தால் சரீரம் பாவத்துக்கு மரித்ததாயும் ஆவியானது நீதியினிமித்தம் ஜீவனுள்ளதாயும் இருக்கிறது. கிறிஸ்துவிலே ஜீவனுள்ளதாயும் இருக்கிறது. கிறிஸ்துவினாலே ஜீவனுள்ள ஆவியின் பிரமாணம் என்னை பாவம் மரணம் என்பவைகளின் பிரமாணத்தினின்று விடுதலை யாக்கிற்றே கர்த்தரே ஆவியானவர் கர்த்தருடைய ஆவி எங்கேயோ அங்கே விடுதலை உண்டு IIகொரிந்தியர் 3:17 தேவப்பிள்ளைகள் அநேக காரியத்திலிருந்து விடுதலை அடைய வேண்டும். இயேசு தம்மை விசுவாசித்த யூதர்களை நோக்கி என் உபதேசத்தில் நிலைத்தால் மெய்யாகவே என் சீஷனாயிருப்பீர்கள் சத்தியத்தை அறிவீர்கள் சத்தியம் உங்களை விடுதலையாக்கும் யோவான். 8:31 பிள்ளைகள் மாமிசமும் இரத்தமும் உடையவர் காளாயிருக்கவும் அவரும் அவர்கள் மேல் மாமிசமும் இரத்தமும் உடையவரானார் மரணத்துக்கு அதிகாரியாகிய பிசாசினை தமது மரணத்தினாலே அழிக்கும் படிக்கும் ஜீவகாலமெல்லாம் அடிமைத்தனத்துக் குள்ளானவர்கள் யாவரையும் விடுதலைப் பண்ணும் படிக்கும் அப்படியானார் எல்லாருக்கும் மரணபயத்தி லிருந்து விடுதலைபெற வேண்டும் எபி. 2:14-15. மரணமே உன்கூர் எங்கே? பாதாளமே உன் ஜெயம் எங்கே? மரணத்தின் கூர் பாவம் பாவத்தின் பலன் நியாயப்பரமாணம் நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலேயே ஜெயம் கொடுக்கிற தேவனுக்கு

ஸ்தோத்திரம் I கொரி. 15:55-57 அவர் நம்மை இப்பொழுதிருக்கிறது போல பிரபஞ்சத்தினின்று விடுவிக்கும் படிக்கும் நம்முடைய பிதாவாகிய தேவனுடைய சித்தத்தின் படியே நம்முடைய பாவங்களுக்காகத் தம்மைத் தாமே ஒப்புக் கொடுத்தார், கலா. 1:4. இவைகள் எல்லாவற்றினின்றும் விடுதலையானால் தான் நம் ஆவிக்குரிய வாழ்க்கை பெருகிவரும், நம் ஜீவன் பூரணமடையும் அப்போஸ்தலர் கொலோசியர் சபைக்கு சொல்லும் போது நீங்கள் கிறிஸ்துவுடன் எழுந்ததுண்டானால் கிறிஸ்து தேவனுடைய வலதுபாரிசத்தில் இருக்கும் மேலானவைகளை நாடுங்கள். இன்றைக்கு நாம் பார்க்கும் போது அநேகர் பூமிக்குரிய காரியங்களை தான் தேடுகிறார்கள். பூமிக்குரிய சிந்தையும் பூமிக்குரிய காரியங்களையே தேடுகிறார்கள் கர்த்தருடைய வருகை எவ்வளவோ நெருங்கி வருகிறது. பாவத்துக்கு மரித்த தேவப்பிள்ளைகளின் ஜீவன் கிறிஸ்துவுக்குள் தேவனுக்குள் மறைக்கப்பட்டிருக்கிறது. நம்முடைய ஜீவனாகிய கிறிஸ்து வெளிப்படும் போது நீங்களும் அவரோடு கூட மகிமையாக வெளிப்பட்டு விடுவீர்கள் இந்த அனுபவத்தை யாவரும் பெற்றுக் கொள்ள வேண்டும்.

நித்திய ஜீவன்

ஜீவனைப்பற்றி யாக்கோபு அப்போஸ்தலன் சொல்லும் போது நாளைக்கு நடப்பது உங்களுக்கு தெரியாதே உங்கள் ஜீவன் எப்படிப்பட்டது கொஞ்ச காலம் தோன்றி பின்பு தோன்றாமல் போகிற புகையைப்போல் இருக்கிறது யாக். 4:14. சரீர ஜீவனுக்காய் எடுக்கிற முயற்சி அற்ப பிரயோஜனம் உள்ளது. சாலமோன் ஞானி இந்த உலக சந்தோஷங்களை அனுபவித்தான் அவர் சொல்லும் போது எல்லாம் மாயையும் மனதுக்கு சஞ்சலம் ஆகையால் இந்த ஜீவனை வெறுத்தேன் என்று சொல்லுகிறார் பிர. 2:17. தெய்வீக

பயம் தெய்வபக்தி தேவனுக்கு கீழ்படிதல் தேவசித்தம் செய்கிறது. தேவனை நேசிக்கிறது. கர்த்தரை பின்பற்றி நடக்கிறது. இந்த ஜீவனுக்கும் இதற்கு பின்வரும் ஜீவனுக்கும் வாக்குத்தத்தம் முன்னதாகையால் எல்லாவற்றிலும் பிரயோஜனம் முள்ளது. இயேசு சொல்லும் போது தன் ஜீவனை இரட்சிக்கவிரும்பு கிறவன் அதை இழந்துபோவான் என்னிமித்தமாக தன் ஜீவனை இழந்து போகிறவன் அதைக்கண்டடைவான் மத். 16:24,25. ஆதிமுதல் கேள்விப்பட்டது நிலைத்திருந்தால் நீங்களும் பிதாவிலும் குமாரனிலும் நிலைத்திருப்பீர்கள் நித்திய ஜீவனை அளிப்பேன் என்பதே அவர் நமக்கு செய்த வாக்குதத்தம் யோவான் 2:24.25

அல்லாமலும் ஒருவனுடைய மீறுதல் அந்த ஒருவன் மாமிசமாகி மரணம் ஆண்டு கொண்டிருக்க கிருபையின் பரிபூரணத்தையும் நீதியாக ஈவின் பரிபூரணத்தை பெறுகிறவர்கள் இயேசு கிறிஸ்து எல்லாம் ஒருவராலே ஜீவனை அடைந்து ஆளுவார்கள் என்பது அதிக நிச்சயமாமே சதாகாலங்களிலும் அவரோடு ஆளுகைச் செய்வது எவ்வளவோ பெரிய பாக்கியம். இந்த பெரிய பாக்கியத்தையாரும் இழந்துபோகக்கூடாது. ஆகையால் ஓரே மிறுதலினாலே எல்லா மனுஷனுக்கும் ஆக்கினைக்கு ஏதுவான தீர்ப்பு உண்டானது போல ஓரே நீதியினாலே எல்லா மனுஷனுக்கும் ஜீவனை அளிக்கும் நீதிக்கு ஏதுவான தீர்ப்பு உண்டாயிற்று ஆதலால் பாவம் மரணத்துக்கு ஏதுவாக ஆண்டுகொண்டது போல கிருபையானது நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாய் நீதியினாலே நித்திய ஜீவனுக்கு ஏதுவாயிருக்கிறது. நீதியின் பாதையில் ஜீவன் உண்டு இப்பொழுது நீங்கள் பாவத்திலிருந்து விடுதலையாக்கப்பட்டு தேவனுக்கு அடிமையானதினால் பரிசுத்த மாகுதல் உங்களுக்கு

கிடைக்கும் பலன். முடிவோ நித்திய ஜீவன் பாவத்தின் சம்பளம் மரணம் தேவனுடைய கிருபை வரங்கள் நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்த்துவினால் உண்டான நித்திய ஜீவன் ஜிவனுக்குள் பிரவேசிப்பது நித்திய சந்தோஷம், நித்திய சமாதானம், நித்திய மாட்சி நித்திய ஆனந்தம். இந்த உலகத்தில் தேவப்பிள்ளைகள் ஜீவனடைந்து ஜீவனுள்ள தேவனுக்கு யுத்த வீரர்களாக காணப்பட வேண்டும். பவுல் சொல்லும் போது நீங்கள் பிசாசின் தந்திரங்களோடு எதிர்த்து நிற்க திராணியுள்ளவர்களாகும்படி தேவனுடைய சர்வாயுத வர்க்கத்தை தரித்துக் கொள்ளுங்கள்.

ஜெயம் கொண்டவர்கள்

மாமிசத்தோடும் இரத்தத்தோடும் அல்ல துரைத்தனங் களோடும் அதிகாரங்களோடும் இப்பிரபஞ்சத்தின் அந்தகார லோகதிபதிகளோடும் வானமண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனையோடும் நமக்கு போராட்டம் உண்டு எபே. 6:11-12. கர்த்தர் தம்முடைய பிள்ளைகள் உலகத்தை ஜெயிக்க பொல்லாத ஆவிகளை ஜெயிக்க வைத்திருக்கிறார். யோவான் 2:13-14 பார்க்கும் போது வாலிபரே பொல்லாங்களை ஜெயித்ததினால் எழுதுகிறேன். வாலிபரே நீங்கள் பலவான்கள். தேவவசனம் உங்களில் நிலைத்திருக்கிறதினாலும் நீங்கள் பொல்லங்கனை ஜெயித்தவர் களாயிருக்கிறீர்கள். ஒரு தடவை தாவீது சொல்லும் போது ஜீவனுள்ள தேவனுடைய சேனையை நிந்திக்கிறக்கு விருத்த சேதனம் இல்லாத இவன் எம் மாத்திரம் தாவீது பெலிஸ்தியனைப் பார்த்து நீ பட்டயத்தோடும் ஈட்டியோடும் வருகிறாய். நானோ நிந்தித்த இஸ்ரவேலினுடைய இராணு வங்களின் தேவனாகிய சேனைகளுடைய கர்த்தரின் நாமத்தில் உன்னிடத்துக்கு வருகிறேன். தாவீது கோலியாத்தை ஜெயித்தான். இஸ்ரவேல்

ஜனங்களுக்கு என் நாமம் தரிக்கப்பட்ட என் ஜனம் என்று சொல்கிறார். அவர் நாமம் பரிசுத்தமும் பயங்கரமாயிருக்கிறது சங். 11:9. சீஷர்கள் சொல்லும் போது உம்முடைய நாமத்தினாலே பிசாசுகள் எங்களுக்கு கீழ்படிகிறது. என்று சொன்னார்கள். இயேசு சொல்லும் போது இதற்காக நீங்கள் சந்தோஷப்படாமல் உங்கள் நாமங்கள் பரலோகத்தில் எழுதப்பட்டதற்காக சந்தோஷப்படுங்கள் பிதாவின் நாமம் தரிப்பிக்கப்பட்டவர்கள் பரிசுத்த நகரத்தின் நாமம் வெளி 3:12 அவனுக்கு புதிய நாமத்தை கொடுப்பேன். அவருடைய நாமம் தரிப்பிக்கப்பட்டவர்களை கண்டு பிசாசு நடுங்குகிறான். மணவாட்டியைப் பற்றி மணவாளன் சொல்கிறார் அவள் இரண்டு சேனையின் கூட்டத்துக்கு சமமானவள் கர்த்தர் தமது சேனைக்கு முன் சத்தமிடுவார் அவருடைய பாளையமாக யோவான் அப்போஸ்தலர் ஆவிக்குள் காணும் போது பின்பு பரலோகம் திறந்திருக்க கண்டேன் இதோ ஒரு வெள்ளை குதிரை காணப் பட்டது அதின் மேல் ஏறியிருந்தவர் உண்மையும் சத்தியமுமான வரென்னப்பட்டார். அவர் நீதியாய் யுத்தம் பண்ணுகிறார் அவருடைய கண்கள்அக்கினி ஜுவாலையைப் போல் இருந்தது அவருடைய சிரசின் மேல் அநேககிரீடங்கள் இருந்தன அவர் நெற்றியில் வெறொருவருக்கும் தெரியாத நாமமும் எழுதியிருந்தது இரத்தத்தால் தோய்க்கப்பட்ட வெண் வஸ்திரத்தை தரித்திருந்தார். அவருடைய நாமமும் தேவனுடைய வார்த்தை என்பதே பரலோகத்திலுள்ள சேனைகள் வெண்மையான சுத்தமான மெல்லிய வஸ்திரம் தரித்தவர்களாய் வெள்ளைக்கு திரையின் மேல் ஏறிச்சென்றார்கள். அந்திக்கிறிஸ்துவையும் கள்ளத்தீர்க்கத் தரிசியையும் பிடித்து அக்கினி கடலிலே போடவும் சாத்தானை பிடித்து பாதாளத்தில் அடைத்து வைக்கவும் ராஜாதி ராஜாவாய் இந்த உலகத்தில் அரசாளவும் வருகிறார். இயேசுவின் ஜீவனைப்

பெற்றுக்கொண்ட பிள்ளைகள் இயேசுவைப் போல் காணப்படுகிறார்கள். தாவீது சொல்லும் போது ஜீவனுள்ள தேவனுடைய சேனை ஒலிவமலையின் மேல் இயேசுவோடு காணப்படுகிறார்கள். இவர்கள் ஜெயம் கொண்ட பரிசுத்தவான்கள் கர்த்தருக்கு பிரியமானவர்களை அவர் பணிவிடைகளா யிருக்கிற அவருடைய சர்வசேனைகளே அவரை ஸ்தோத்தரியுங்கள் கர்த்தருடைய சத்தத்தை கேட்டு அவருடைய வசனத்தின் படி செய்கிற பலத்த சவுரியவான்களாகிய அவருடைய துதர்களே அவரை ஸ்தோத்தரியுங்கள் எபிரேயரில் 12:22ல் சொல்லப்படுகிறது. நீங்களோ சீயோன் மலையிடைத்திற்கும் ஜீவனுள்ள தேவனுடைய நகரமாகிய பரம எருசலேமினிடத்திற்கு அழைத்துக் கொண்டு வருகிறது எவ்வளவோ பெரிய பாக்கியம்.

ஜீவனுள்ள சபை

புதிய ஏற்பாட்டில் பொந்தேகொஸ்தே நாளில் பரிசுத்தாவி ஊற்றப்பட்டு சபை ஆரம்பிக்கப்பட்டது. சபை ஜீவனுள்ள சபையாய் வளர ஆரம்பித்தது. இயேசு நமக்காய் ஜீவனைக் கொடுத்ததினால் அவருடைய இரத்தத்தால் பாவமன்னிப்பு கிடைத்தது. ஞானஸ்நானம் எடுத்து பரிசுத்தாவி பெறும்போது அப்போஸ்த லருடைய உபதேசத்திலும் அந்நியோந்யத்திலும், ஜெபம் பண்ணுவதிலும் உறுதியாய் தரித்தார்கள். இரட்சிக்கப்படு கிறவர்களை கர்த்தர் அனுதினமும் சபையிலே சேர்த்துக்கொண்டு வந்தார் அப். 2:47. அப்போஸ்தலனாகிய பவுல் தீமோத்தேயுவுக்கு சொல்லும் போது தாமதிப்பேனாகில் தேவனுடைய வீட்டிலே நடக்க வேண்டிய வகையை அறியும்படிக்கு இவைகளை உனக்கு எழுதுகிறேன். அந்த வீடு ஜீவனுள்ள தேவனுடைய சபையாய் சத்தியத்துக்கு தூணும் ஆதாரமுமாயிருக்கிறது. தீமோ 3:15. மேலும்

அன்புக்கும் நற்கிரியைக்கும் நாம் ஏவப்படும்படி ஒருவர் கவனித்து சபை கூடி வருதலை சிலர் விட்டுவிடுகிறது போல நாமும் விட்டுவிடாமல் ஒருவருக்கொருவர் புத்திச் சொல்லக்கடவோம். நாளானது சமீபித்து வருகிறதை. எவ்வளவாய் பார்க்கிறீர்களோ அவ்வளவாய் புத்திச் சொல்ல வேண்டும் எபி. 10: 24,25. ஆவியினால் நிறைந்து தேவனுக்கு ஆராதனை செய்யவும் பாடல்களைபாடவும் சொல்லப்பட்டிருக்கிறது. சபையிலே இதெல்லாம் தேவனுக்கு மகிமையாய் நடக்க வேண்டியிருக்கிறது. பிலி. 3:3. அவனுடைய வார்த்தையை சந்தோஷமாய் ஏற்றுக் கொண்டவர்கள் அப்போஸ்தலரின் உபதேசத்திலும் அன்னியோன் னியத்திலும் அப்பம் பிட்கிறதிலும், ஜெபம்பண்ணுவதிலும் உறுதியாய்த்தரித்திருந்தார்கள். அவர்கள் ஒருமனப்பட்டவர்களாய் தேவாலையத்திலே அனுதினமும் தரித்திருந்து வீடுகள் தோறும் அப்பம் பிட்டு மகிழ்ச்சியோடும் கபடமில்லாத இருதயத்தோடும் போஜனம் பண்ணி தேவனை துதித்து ஜனங்களொல்லாரிடத்திலும் தயவுபெற்றிருந்தார்கள் அப். 2:44. கர்த்தர் சொல்லும் போது என்னுடைய வீடு சகலஜனங்களுக்கும் ஜெப வீடு எனப்படும் ஜீவனுள்ள சபையாகிய வீட்டிலே அப். 2:42 முதல் 47 வரை இவ்வகை காரியங்கள் நடக்க வேண்டும் ஜெபம் நடக்க வேண்டும். நான் அவர்களுக்குள் வாசம் பண்ணி அவர்களுக்குள்ளே உலாவி அவர்கள் தேவனாயிருப்பேன் அவர்கள் என் ஜனங்களா யிருப்பார்கள் என்று தேவன் சொன்னபடி நீங்கள் ஜீவனுள்ள தேவனுடைய ஆலயமாயிருக் கிறீர்கள் II கொரி. 6:16 அவர் வாசம் பண்ணி அவர் உலவுகிற சபைதான் ஜீவனுள்ள சபை இன்று அநேகரைப் பார்க்கும்போது கர்த்தர் வாசம் பண்ணி உலாவ முடியாமலிருக்கிறது அநேகருடைய அன்பு குறைந்து கொண்டிருக்கிறது. கடைசி கால சம்பவங்கள் நிறைவேறி வருகிறது.

ஆகையால் நாம் கடைசி வரை ஜீவனுள்ள தேவனுடைய பிள்ளைகளா யிருப்போம்.

நித்திய ஜீவனை சுதந்தரிக்க :

பிரியமானவர்களே நாம் சகோதரரிடத்தில் அன்பு கூரும்படி மரணத்தை விட்டு நீங்கி ஜீவனுக்குட் பட்டிருக்கிறோம் என்று அறிந்திருக் கிறோம். தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருந்தால் நீங்கள் மாமிசத்துக் குட்பட்டவர்களாயிராமல் ஆவிக்குட்ப் பட்டவர்களாயிருப்பீர்கள் அவர்களுக்குள் ஜீவன் நிலைத்திருக்கிறது. ஜீவ வசனம் உள்ளத்தில் இருக்கும் போது நித்திய ஜீவன் நிலைத்திருக்கிறது. இதோ சகோதரர் ஒருமித்து வாசம் பண்ணுவது எத்தனை நன்மையும் எத்தனை இன்பமு மானது. அது எத்தனை மேன்மையான ஆசீர்வாதங்கள் அது ஆரோனுடைய மேன்மையான ஆசீர்வா தங்களுக்கு ஒப்பிட்டு சொல்லப்பட்டிருக்கிறது. நீதியை விரும்பி அக்கிரமத்தை வெறுக்கிறார். ஆதலால் தேவனே உம்முடைய தேவன் உமது தோழரைப்பார்க்கிலும் உம்மை ஆனந்த தைலத்தினால் அபிஷேகம் பண்ணினார். மணவாட்டியின் அபிஷேகத்தை பற்றி மணவாளன் சொல்லுகிறார். சகல கந்தவர்க்கங்களைப்பார்க்கிலும் உன் பரிமளத்தைலங்கள் எவ்வளவு வாசனையாயிருக்கிறது. உன். 4:10. என்னை சிநேகிக்கிறவர்கள் மெய்பொருளை சுதந்தரிக்கும் படிக்கும் அவர்களுடைய களஞ்சியங்களை நிரப்பும்படிக்கும் அவர்களை நீதியின் வழியிலும் நியாயப்பிரமாணங்களிலும் நடத்தும் என்றார் நீதி. 8:17. சாட்சியாய் சீயோனின் அபிஷேகமும் ஆசீர்வாதங்களும் கர்த்தர் வைத்திருந்தார். நான் என்னுடைய பரிசுத்தபர்வதமாகிய சீயோன்மீதில் என்னுடைய ராஜாவை அபிஷேகம் பண்ணிவைத்தேன். சங். 2:6. சீயோனில் இருக்கிறார்

அவரைப்போல் அபிஷேகம் உள்ளவர்கள் அவரைப்போல் பரிசுத்தம் உள்ளவர். இந்த நாட்களில் பார்க்கும் போது அபிஷேகம் நிறைந்து வருகிறது. சங். 133:3ல் அதின் ஆசீர்வாதம் எர்மோன் மேலும் சீயோன்பர்வதங்கள் மேலும் இறங்கும் பனிக்கும் ஒப்பாயிருக்கிறது. நான் இஸ்ரவேலுக்கு பனியைப்போல் இருப்பேன். அவன் லீலிப்புஷ்பத்தைப்போல் மலருவான் லீபனோனைப்போல் வேரூன்றி நிற்பான். அவன் கிளைகள் ஓங்கி படரும், அவன் அலங்காரம் ஒலிவ மரத்தின் அலங்காரத்தைபோலவும் அவனுடைய வாசனை லீபனோனுடைய வாசனையைப்போல் இருக்கும் ஓசியா 14:6-7. உமது பராக்கிரமத்தின் நாளில் உம்முடைய ஜனங்கள் பரிசுத்த அலங்காரமாயிருப்பார்கள். விடியற்கால கர்ப்பத்தில் பிறக்கும் பனிக்கும் சமானமாய் உம்முடைய ஜனம் உமக்கு பிறக்கும் சங். 10:3. மரித்த உம்முடையவர்கள் பிரதேமான என்னுடையவர்களோடே கூட எழுந்திருப்பார்கள். மண்ணிலே தங்கியிருப் பவர்களே விழித்து கெம்பீரியுங்கள் உம்முடைய பனிபூண்டுகளின் மேல் பெய்யும் பனிப்போல் இருக்கும் மரித்தோரையும் பூமி புறப்பட பண்ணும். இப்படிப்பட்டவைகளை கேள்விப்பட்டது யார்? இப்படிப்பட்டவைகளை கண்டது யார்? ஒரே நாளில் பிள்ளை பிறக்குமோ ? ஒரே ஜாதி ஒருமிக்கப் பிறக்குமோ? சீயோனோ ஒருமிக்க வேதனைப்பட்டும், தன் குமாரரைப் பெற்றும் இருக்கிறது. ஏசா. 66: 7,8. பனியின் ஆசீர்வாதங்களைப் பார்க்கும் போது பனி பெய்யும் போது இந்த மன்னாவும் பெய்கிறது. எண். 11:9. மழையானது இளம் புல்லின் மேல் பொழிவது போல் பொழியும். பனிப் புஷ்பங்கள் புல்லில் இறங்குவது போல் வானில் இறங்கும். உபா. 32:21. பனித்துளிக்கு ஒப்பாயிருக்கிற அந்த இடத்துக்கும் அங்கே கர்த்தர் என்றைக்கும் ஆசீர்வாதத்தையும் ஜீவனையும் கட்டளை ஈடுகிறார். இந்த

ஆசீர்வாதம் என்றைக்கும் உள்ளது. பேதுரு அப்போஸ்தலர் கேட்கிறார். நாங்கள் எல்லாவற்றையும் விட்டு உம்மை பின்பற்றினோமே எங்களுக்கு என்ன கிடைக்கும்? அதற்கு இயேசு மறுஜென்ம காலத்தில் மனுஷ குமாரன் தம்முடைய மகிமையுள்ள சிங்காசனத்தில் வீற்றிருக்கும் போது என்னைப் பின்பற்றின நீங்களும் இஸ்ரவேலின் பன்னிரண்டு கோத்திரங்களையும் நியாயம் தீர்க்கிறவர்களாய் வீற்றிருப்பார்கள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். என் நாமத்தினிமித்தம் வீட்டையாவது, சகோதரரையாவது, சகோதரிகளையாவது, தகப்பனையாவது, தாயையாவது, மனைவியையாவது, பிள்ளை களையாவது, நிலங்களையாவது விட்டவன் எவனோ அவன் நூறத்தனயாய் அடைந்து நித்திய ஜீவனை சுதந்தரித்துக் கொள்ளுவான். மத். 19 : 27, 28 ஜீவப்புஸ்தகத்தில் பெயர் எழுதப்படுகிறது.

பிலி. 4:3 இயேசுவின் இரத்தத்தால் மீட்கப்படும் போது தேவனின் பிள்ளைகள் என்று பெயர் எழுதப்படுகிறது. அந்தப் புஸ்தகமே ஜீவப்புஸ்தகம். ஜீவப்புஸ்தகத்தில் பேர் எழுதப் படாதவன் எவனோ அவன் அக்கினிக் கடலில் தள்ளப்படுவான் வெளி. 20:6 இயேசுவின் கையில் ஜீவப்புஸ்தகம் இருக்கிறது. அதில் பெயர் எழுதப்பட்டவர்கள் மாத்திரம் பரிசுத்த நகரத்திற்குள் பிரவேசிப்பார்கள். தீட்டுள்ளதும், அருவருப்புள்ளதும், பொய்யை நடப்பிக்கிறது மாகிய ஒன்றும் அதில் பிரவேசிப்பதில்லை. கர்த்தருக்குள் வந்து ஜெயம் கொள்ளுகிற வனெவனோ அவனுக்கு வெண் வஸ்திரம் தரிப்பிக்கப்படும். ஜீவப்புஸ்தகத் திலிருந்து அவனுடைய நாமத்தை நான் கிறுக்கிப் போடாமல் பிதா முன்பாகவும், அவருடைய தூதர் முன்பாகவும்,அவன் நாமத்தை அறிக்கையிடுவேன். வெளி 3:5. ஒருவன் இந்த தீர்க்கதரிசன புஸ்தகத்தின் வசனங்களிலிருந்தும் எதையாகிலும் எடுத்துப்

போட்டால் ஜீவப்புஸ்தகத்திலிருந்தும் பரிசுத்த நகரத்திலிருந்தும் இந்த புஸ்தகத்தில் எழுதப்பட்டவைகளிலிருந்தும் அவனுடைய பங்கை தேவன் எடுத்துப் போடுவார். வெளி 22:19. பூரணப்பட்ட சபை எடுத்துக் கொண்ட பிறகு அந்திக்கிறிஸ்துவின் ஆட்சி பூமியில் நடக்கும். அப்போது உலக தோற்றமுதல் அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியினுடைய ஜீவப்புஸ்தகத்தில் பேரெழுதப்படாத பூமியின் குடிகள் யாவரும் அதை வணங்குவார்கள். காதுள்ளவன் எவனோ அவன் கேட்கக்கடவன். வெளி 13:8. மீண்டும் என் உடன்படிக்கை நிலைத்திருக்கும் படிக்கு இந்தக் கட்டளைகளை உங்களிடத்திற்கு அனுப்புவேன் அப்பொழுது அறிந்து கொள்வீர்கள் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார். அவர் பண்ணின உடன்படிக்கை ஜீவனும் சமாதானமுமாயிருந்தது. நாம் ஞானஸ் நானம் எடுக்கும் போது நல்மன சாட்சியிலே உடன்படிக்கை செய்கிறோம். அதிலே நமக்கு ஒரு புதிய ஜீவன் கிடைக்கிறது.1 பேது. 3 : 21. ஆசாரிய ஊழியத்திற்கு உடன்படிக்கைச் செய்கிறார். அந்த உடன்படிக்கையிலே ஜீவனும் சமாதானமும் இருக்கிறது. மல். 4:5. அவர்கள் இருதயம் அவர்களில் நிலைவரப் படவில்லை. அவர்களுடைய உடன்படிக்கை உண்மையாயிருக்க வில்லை சங். 78:37. இந்த உடன்படிக்கை பரிசுத்த உடன்படிக்கை லூக். 1:2. நான் அவர்களோடு சமாதான உடன்படிக்கைச் செய்வேன். அவர்களுக்கு நித்திய உடன்படிக்கையாயிருந்து நான் அவர்களை நிலைப்படுத்தி அவர்களை வர்த்திக்கப்பண்ணி அவர்கள் நடுவிலே என் பரிசுத்த ஸ்தலத்தை என்றைக்கும் ஸ்தாபிப்பேன். எசே. 37:26. ஒவ்வொரு உடன்படிக்கையிலும் அநேக ஆசீர்வாதமும் ஜீவனும் இருக்கிறது. இயேசுவும் இப்பொழுது இம்மையில் துன்பங்களோடு கூட நூறத்தனையாய் வீடுகளையும் சகோதரரையும் சகோதரிகளையும் தாய்களையும் பிள்ளை

களையும் நிலங்களையும் மறுமையில் நித்திய ஜீவனையும் அடைவான் என்றும் மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் லூக். 50:30 தோட்டங்களுக்கு நீரூற்றும் ஜீவத் தண்ணீரின் துரவும் லீபனோனிலிருந்து ஓடி வரும் வாய்க்காலும் உண்டாயிருக்கிறது. மணவாளன் சொல்லும் நீ அடைக்கப்பட்டத் தோட்டம். மறைவு கட்டப்பட்ட நீரூற்றும் முத்திரிக்கப்பட்ட கிணறுமாயிருக்கிறாய். உலக பிரகாரமாய் சில கிணறுகளில் தண்ணீர் சுத்தமாய் கிடைக்க வில்லையானால் சிறு கம்பிகளினால் மறைவு போடுவார்கள். அதே போல் மணவாட்டியின் கிணறு தூசியை போன்ற பாவங்கள் உள்ளே வராதபடி மறைவு கட்டப்பட்டதாயிருக்கிறது. அந்த துரவின் தண்ணீர் அநேக மக்களுக்கு பிரயோஜனமாயிருக்கிறது. நீதி. 4:23. எல்லாக் காவலோடும் உன் இருதயத்தைக் காத்துக்கொள். அதினிடத்தினின்று ஜீவ ஊற்று புறப்படும். உன் கிணற்றிலுள்ள தண்ணீரினாலும், உன் துரவில் ஊறுகிற தண்ணீரையும் பானம் பண்ணு. இந்த ஜீவத் தண்ணீரைப் பருகும் போது, அவன் ஆத்துமா ஜீவனடைந்து பெலப்பட்டு வரும். இன்னும் நாம் பார்க்கும் போது, பசி உள்ளவனிடத்தில் உன் ஆத்துமாவை சாய்த்து சிறுமைப்பட்ட ஆத்துமாவை திருப்தியாக்கினால், அப்பொழுது இருளில் உன் வெளிச்சம் உதித்து, உன் அந்தகாரம் மத்தியானத்தைப் போலாகும் ஏசா. 58:10.

ஜீவத்தண்ணீர்

கர்த்தர் நித்தமும் உன்னை நடத்தி மகா வறட்சியான காலங்களிலும் உன் ஆத்துமாவை திருப்தியாக்கி உன் எலும்புகளை நிணமுள்ளதாக்குவார். நீ நீர்ப்பாய்ச்சலான தோட்டத்தைப் போலவும், வற்றாத நீரூற்றைப் போலவும் இருப்பாய். இது மேன்மையான அனுபவம். கர்த்தர் ஜீவத் தண்ணீராகிய

ஊற்றைப் போல் இருப்பார். நம்முடைய இருதயம் பரிசுத்தமாய் இருக்க வேண்டும்.

வேதவாக்கியம் சொல்லுகிறபடி என்னிடத்தில் விசுவாச மாயிருக்கிறவன் எவனோ அவன் உள்ளத்திலிருந்து ஜீவத்தண்ணீருள்ள நதிகள் ஓடும் என்கிறார். பேரின்ப நதியினால் அவர்கள் தாகத்தைத் தீர்க்கிறார். சங். 36:8. ஒரு நதியுண்டு, அதின் நீர்க்கால்கள் தேவனுடைய நகரத்தையும், உன்னதமானவர் வாசம் பண்ணும் பரிசுத்த ஸ்தலத்தையும் சந்தோஷிப்பிக்கும். நம்முடைய இருதயம் பரிசுத்த ஸ்தலமாயிருந்தால், நிறைவான சந்தோஷம் அனுபவிக்கலாம். கர்த்தரும் நாம் நிறைவான சந்தோஷம் அனுபவிக்கவே விரும்புகிறார். என்னுடைய சந்தோஷம் உங்களில் நிலைத்திருக்கும் படிக்கும், உங்கள் சந்தோஷம் நிறைவாய் இருக்கும் படிக்கும் இவைகளை உங்களுக்குச் சொன்னேன். நான் உங்களில் அன்பாயிருக்கிறது போல, நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருக்க வேண்டும் என்பதே என்னுடைய கற்பனையா யிருக்கிறது யோ. 15:11,12. உங்கள் சந்தோஷம் நிறைவாயிருக்கும் படிக்கு இவைகளை எழுதுகிறேன் 1 யோ. 1:4 அப்போஸ்தலர் சொல்லும் போது, நாம் அந்நியரும், பரதேசிகளுமாயிராமல் பரிசுத்தவான்களோடே ஒரே நகரத்தாரும் தேவனுடைய வீட்டாருமாயிருந்து அப்போஸ்தலர், தீர்க்கதரிசிகள் என்பவர்களுடைய அஸ்திபாரத்தின் மேல் கட்டப்பட்டவர் களாயிருக்கிறீர்கள். அதற்கு இயேசு நீங்கள் தாமே மூலைக்கல்லா யிருக்கிறீர்கள். இந்த நகரமாகிய சபைக்கு நீங்கள் எந்த எந்தோஷம் கொடுக்கிறீர்கள்? ஒரு நதியுண்டு, அதின் நீர்க்கால்கள் தேவனுடைய நகரத்தையும், உன்னதமானவர் வாசம் பண்ணும் பரிசுத்த ஸ்தலத்தையும் சந்தோஷிப்பிக்கும் சங். 46:4. பரிசுத்த ஆவியாகிய நதியை எசேக்கியேல் 47 -ம் அதிகாரத்தில்

சொல்லப்பட்டிருக்கிறது. நதியோரமாய் இருக்கிற சகல விருட்சங்களும் வளரும். அவைகள் உதிருவதில்லை, அவைகளின் இலைகளுக்கு தண்ணீர் பரிசுத்த ஸ்தலத்திலிருந்து பாய்கிறபடியால் மாதம் தோறும் புது கனிகளை கொடுக்க வேண்டிய தாயிருக்கும். கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து. இரவும் பகலும் அவருடைய வேதத்தில் தியானமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான். அவன் நீர்க்கால்களின் ஓரமாய் நடப்பட்டு, தன் காலத்தில் தன் கனியை தந்து, இலையுதிராதிருக்கிற மரத்தைப் போலிருப்பான்; அவன் செய்வதெல்லாம் வாய்க்கும் சங். 1:1,2.

கர்த்தர் மேல் நம்பிக்கை வைத்து, கர்த்தரைத் தன் நம்பிக்கையாக கொண்டிருக்கிற மனுஷன் பாக்கியவான். அவன் தண்ணீரண்டையில் நாட்டப்பட்டதும், கால்வாய் ஓரமாய்த் தன் வேர்களை விடுகிறதும், உஷ்ணம் வருகிறதைக் காணாமல் இலை பச்சையாயிருக்கிறதும், மழைத்தாழ்ச்சியான வருஷத்திலும் வருத்தமின்றி தப்பாமல் கனி கொடுக்கிறதுமான மரத்தைப் போலிருப்பான் எரேமியா 17:7,8. அவைகளுக்கு பாயும் தண்ணீர் விசுவாச ஸ்தலத்திலிருந்து பாய்கிறபடியால் அவைகளின் இலைகள் உதிர்வதில்லை; கனி கெடுவதில்லை எசேக். 47:3. யோவான் அப்போஸ்தலர் காணும் போது பின்பு பளிங்கைப் போல் தெளிவான ஜீவத் தண்ணீரும், சுத்தமான நதி தேவனும், ஆட்டுக்குட்டியா னவரும் இருக்கிற சிங்காசனத்திலிருந்து புறப்பட்டு வருகிறதை எனக்குக் காண்பித்தார். நகரத்து வீதியின் மத்தியிலும், நதியின் இருகரையிலும், பன்னிரண்டுவிதமான கனிகளைத் தரும் ஜீவ விருட்சம் இருந்தது. அது மாதந்தோறும் தன் கனிகளைக் கொடுக்கும்; அந்த விருட்சத்தின் இலைகள் ஜனங்கள் ஆரோக்கியமடைவதற்கு ஏதுவானவைகள் வெளி22:1,2.

இயேசு சொல்லும் போது, நான் கொடுக்கும் தண்ணீரைக் குடிக்கிறவனுக்கோ, ஒருக்காலும் தாகமுண்டாகாது; நான் அவனுக்குக் கொடுக்கும் தண்ணீர் அவனுக்குள்ளே நித்திய ஜீவகாலமாய் ஊறுகிற நீரூற்றாயிருக்கும் என்றார் யோ. 4:14. பிரியமானவர்களே, உலகப்பிரகாரம் வரும்போது அநேக ஊற்றுக்கள் வற்றிப்போகும். ஆனால் இயேசு சொல்லும் போது நித்திய காலம் ஊறுகிற நீரூற்று. எவ்வளவு பெரிய பாக்கியம் இது தான் ஆத்துமா மரணம் இல்லாத வாழ்க்கை. இந்தத் தண்ணீர் குடிக்காதவர்கள் ஆத்துமா மரணமடைந்து நித்தியகாலம் அக்கினி கடலில் பங்கடைவார்கள். ஆனால் ஆத்துமாவில் ஜீவன் அடைந்த பரிசுத்தவான்கள் இயேசுவுடனே சதாகாலம் வாழ்வார்கள்.

பின்பற்றுகிறவர்கள் :

இயேசு சொல்லும் போது நான் உலகத்துக்கு ஒளியாயிருக்கிறேன், என்னைப் பின்பற்றுகிறவன் இருளில் நடவாமல் ஜீவ ஒளியை அடைந்திருப்பார்கள் என்றார் யோ. 8:12. அப்போஸ்தலனாகிய பவுல் சொல்லும் போது, நான் கிறிஸ்துவைப் பின்பற்றுகிறது போல, நீங்களும் என்னைப் பின்பற்றுகிறவர்களாயிருங்கள் 1 கொரி. 8:1. ஆதலால் நீங்கள் பிரியமான பிள்ளைகளைப் போல் தேவனைப் பின்பற்றுகிறவர் களாயிருங்கள் எபே. 5:1. இயேசு சொல்லும் போது என் ஆடுகள் என் சத்தத்திற்கு செவிகொடுக்கிறது. நான் அவைகளை அறிந்திருக்கிறேன், அவைகள் எனக்கு பின் செல்லுகிறது. நான் அவைகளுக்கு நித்திய ஜீவனைக் கொடுக்கிறேன். அவைகள் ஒருக்காலும் கெட்டுப்போவதில்லை. ஒருவனும் அவைகளை என் கையிலிருந்து பறித்துக் கொள்வதுமில்லை. ஸ்திரீகளால் தங்களைக் கறைப்படுத்தாதவர்கள் இவர்களே. கற்புள்ளவர்கள் இவர்களே. ஆட்டுக்குட்டி

யானவர் எங்கே போனாலும் அவரைப் பின்பற்றுகிறவர்கள் இவர்களே. இவர்கள் மனுஷரிலிருந்து தேவனுக்கும், ஆட்டுக் குட்டியான வருக்கும் முதற் பலனாக மீட்டுக் கொள்ளப்பட்டவர்கள் வெளி. 14:4. இவர்களுடைய வாயிலே கபடம் காணப்படவில்லை. இவர்கள் தேவனுடைய சிங்காசனத்திற்கு முன்பாக மாசில்லாதவர் களுமாயிருக்கிறார்கள். உண்மையாயிருப்பவர்கள் இயேசுவோடு நிற்கிறார்கள். இன்று நாம் பார்க்கும் போது, சிலர் உலகத்தைப் பின்பற்றிப் போகிறார்கள். தோமா உலகத்தை சிநேகித்தான். பிலிப்பியருக்கு சொல்லும் போது சகோதரரே, நீங்கள் என்னோடே கூட பின்பற்றுகிறவர்களாகி, நாங்கள் உங்களுக்கு வழிகாட்டுகிறபடி நடக்கிறவர்களை மாதிரியாக நோக்குங்கள். ஏனெனில், அநேகர் வேறுவிதமாய் நடக்கிறார்கள். அவர்கள் சிலுவைக்கு பகைஞரென்று உங்களுக்கு அனேகந்தரம் சொன்னேன், இப்பொழுது கண்ணீரோடும் சொல்லுகிறேன் பிலி.3:17,18. எல்லாவற்றையும் விட்டு பின்பற்றுகிறவர்கள் அதற்குரிய வேறு பலனை பெற்றுக் கொள்வார்கள். ஒருவன் எனக்கு ஊழியம் செய்கிறவனானால் என்னைப் பின்பற்றக்கடவன். நான் எங்கே இருக்கிறேனோ அங்கே என் ஊழியக்காரனும் இருப்பான். ஒருவன் எனக்கு ஊழியம் செய்தால் அவனை பிதாவானவர் கனம் பண்ணுவார் யோ. 12:26. தன் ஜீவனை சிநேகிக்கிறவன் அதை இழந்து போவான். இந்த உலகத்தில் தன் ஜீவனை வெறுக்கிறவனோ அதை நித்திய ஜீவகாலமாய் காத்துக் கொள்ளுவான் யோ. 12:24. நீ என் பார்வைக்கு அருமையான படியினால், கனம் பெற்றாய், நானும் உன்னை சிநேகித்தேன். ஆதலால் உனக்குப் பதிலாக மனுஷர்களையும் உன் ஜீவனுக்கு ஈடாக ஜனங்களையும் கொடுப்பேன். அவர் தம்முடைய ஜீவனை நமக்காக கொடுத்ததினால் அன்பு செய்தாரென்று அறிந்திருக்

கிறோம். நாமும் சகோதரருக்காய் ஜீவனைக் கொடுக்க கடனாளிகளாயிருக்கிறோம் யோ. 3:16.

ஜீவனுக்கு போகும் வழி :

ஆதாம் கட்டளையை மீறினபடியால் ஏதேன் தோட்டத்தை விட்டு துரத்தப்பட்டான். தேவனாகிய கர்த்தர் இதோ மனுஷன் நன்மை தீமை அறியத்தக்கவனாய் நம்மில் ஒருவனைப் போல் ஆனான். இப்பொழுது அவன் தன் கையை நீட்டி ஜீவ விருட்சத்தின் கனியை பறித்துப் புசித்து என்றைக்கும் உயிரோடு இராதபடிக்கு செய்ய வேண்டும் என்று சொல்லி தோட்டத்தை விட்டு அனுப்பி விட்டார். ஜீவ விருட்சத்துக்குப் போகும் வழியை காவல் பண்ண கேரூபின்களையும் வீசிக் கொண்டிருக்கும் சுடரொளி பட்டயத்தையும் வைத்தார் ஆதி. 3:22. கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சிலுவையின் மரணத்தின் மூலமாய் அந்த வழி திறக்கப்பட்டது. ஜீவ விருட்சத்தின் மேல் அதிகாரமுள்ளவர் களாவதற்கும், வாசல்கள் வழியாய் நகரத்திற்குள் பிரவேசிப்பதற்கும் அவருடைய கற்பனையின் படி செய்கிறவர்கள் பாக்கியவான்கள் வெளி. 22:14. இயேசு சொல்லும் நானே வாசல், என் வழியாய் ஒருவன் உட்பிரவேசித்தால் அவன் இரட்சிக்கப்படுவான். அவன் உள்ளும், புறம்பும் சென்று நல்ல மேய்ச்சலை கண்டடைவான் யோ. 10:9. சத்தியத்தைக் கைக்கொண்டு வருகிற நீதியுள்ள ஜாதி உள்ளே பிரவேசிக்கிறதற்கு வாசல்களை திறவுங்கள் ஏசா. 26:3. இயேசு நமக்காக மேன்மையான வழியை உண்டுபண்ணி வைத்திருக்கிறார்.

ஆதி அன்பை எபேசு சபை இழந்து போனது. மறுபடியும் ஆதி அன்புக்கு மனந்திரும்புங்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார். ஆதி அன்பை பெற்று. ஆதியில் செய்த கிரியைகளை செய்ய சொல்லுகிறார். மனந்திரும்பா விட்டால் விளக்கு தண்டை விட்டு

நீக்கி விடுவோம். ஆசியா பெயர் சபைகளுக்கு சொல்லும் போது, காதுள்ளவன் கேட்கக்கடவன். ஜெயங்கொள்ளு கிறவனெவனோ அவனுக்கு தேவனுடைய பரதீசின் மத்தியிலிருக்கிற ஜீவ விருட்சத்தின் கனியை புசிக்கக் கொடுப்பேன் என்றெழுது. நகரத்தின் வீதியின் மத்தியிலும் நதியின் இரு கரையிலும் பன்னிரெண்டு விதமான கனிகளைத் தரும் ஜீவ விருட்சம் இருந்தது. அது மாதந்தோறும் நற்கனியை கொடுக்கும். அந்த விருட்சத்தின் இலைகள் ஜனங்கள் ஆரோக்கியம் அடைவதற்கு ஏதுவானவைகள். பரிசுத்த நகரத்தில் அங்கே இராக்காலம் இராது. விளக்கும், சூரியனுடைய வெளிச்சம் அவர்களுக்கு வேண்டு வதில்லை. தேவனாகிய கர்த்தரே அவர்களை பிரகாசிப்பிப்பார். அவர்கள் சதாகாலங்களிலும் அரசாளுவார்கள் வெளி 22:2-5. காணப்படா தவைகளை நோக்கியிருக்கிற நமக்கு அதிசீக்கிரத்தில் நீங்கும் இலேசான நம்முடைய உபத்திரவம் மிகவும் அதிகமான நித்திய கன மகிமையை உண்டாக்குகிறது. காணப்படாதவைகளோ நித்திய மானவைகள் 2 கொரி. 4:17. நம்மோடிருப்பது ஆத்மீக ஜீவனைப் பற்றியது. அப்போஸ்தலர் சொல்லும் போது, என் சகோதரர்கள் பலவிதமான சோதனைகளில் அகப்படும் போது உங்கள் விசுவாசத்தின் செயலானது பொறுமையை உண்டாக்கும் என்று அறிந்து அதை சந்தோஷமாய் ஏற்றுக் கொள்ளுங்கள். சோதனையை சகிக்கிற மனுஷன் பாக்கியவான். அவன் உத்தமனென்று விளங்க வேண்டும். சோதனையை சகிக்க வேண்டும். நீங்கள் சிட்சையை சகிக்கிறவர்களா யிருந்தால் தேவன் உங்களை புத்திரராக எண்ணி நடத்துகிறார்; தகப்பன் சிட்சியாத புதத்திரனுண்டோ? எபி.12:7. அதை போல பாடுகளை சகிக்க வேண்டும். நாம் அவரோடேக் கூட பாடுகளைச் சகித்தோமானால் அவரோடே கூட ஆளுகையும் செய்வோம். 2 தீமோ, 2:12. இயேசு சொல்லும் போது, எனக்கு நேரிட்ட சோதனைகளில் என்னோடு

நிலைத்திருந் தவர்கள் நீங்களே. ஆகையால் என் பிதா எனக்கு ஒரு இராஜ்ஜியத்தை ஏற்படுத்தினது போல நானும் உங்களுக்கு ஏற்படுத்துகிறேன். தமக்கு விரோதமாய் பாவிகளால் செய்யப்பட்ட இவ்விதமான விபரீதங்களை சகித்த அவரையே நினைத்துக் கொள்ளுங்கள் எபி. 12:3.

ஜீவகிரீடம்

பவுல் அப்போஸ்தலன் சொல்லும் போது, எவ்வளவோ துன்பங்களை சகித்தேன். பிரியமானவர்களே, கர்த்தருக்காக பாடுகளையும் துன்பங்களையும் சகித்திருக்கிறார்கள். மற்றவர்கள் செய்யும் அநியாயத்தையும் சகிக்கிறது I கொரி 13. அன்பு தான் சகலத்தையும் சகிக்கும். இயேசு நமக்காக பாடுகளை சகித்தார், சிலுவையிலே வெற்றி சிறந்தார் வெளி. 3:10. சொல்லும் போது, நீ படப்போகிற பாடுகளைக் குறித்து எவ்வளவும் பயப்படாதே. நீங்கள் சோதிக்கப்படுகிறதற்காக பிசாசானவன் உங்களில் சிலரை காவலில் போடுவான். பத்து நாள் உபத்திரவப்படுவீர்கள். ஆகிலும் மரணபரியந்தம் உண்மையாயிரு. அப்பொழுது ஜீவக்கிரீடத்தை உனக்குத் தருவேன் வெளி. 2:10 இந்த கிரீடங்களைப் பார்க்கும் போது நித்திய கிரீடமாயிருக்கிறது இதை யாரும் இழந்து போகக் கூடாது. இதோ சீக்கிரமாய் வருகிறேன். ஒருவனும் உன்னிடத்திலுள்ளதை எடுத்துக் கொள்ளாதபடிக்கு உனக் குள்ளதைப்பற்றிக் கொண்டிரு வெளி 3:1.

இயேசு நமக்காய் ஜீவனைக் கொடுத்ததினால் நித்திய கால ஜீவ கிரீடத்தை பெற்றுக்கொள்ளும் பாக்கியம் நமக்குக் கிடைக்கிறது. அது மட்டுமல்ல, அவருடைய ராஜ்யம் நித்திய இராஜ்யம், நித்திய மகிழ்ச்சி, நித்திய கீர்த்தி, நித்திய வீடு, நித்திய சுதந்திரம், நித்திய மாட்சிமை, நித்திய மகிமை, நித்திய இரட்சிப்பை

அடையும் படி இயேசு ஜீவனைக் கொடுத்ததினாலே இந்த பாக்கியங்கள் நமக்கு வைக்கப்பட்டிருக்கிறது.

ஆத்மீக ஜீவன்

எசேக்கியேல் தரிசனம் காணும் போது இதோ வடக்கேயிருந்து புசல் காற்றும், பெரிய மேகமும் அதோடே கலந்த அக்கினியும் வரக் கண்டேன். அதைச் சுற்றிலும் பிரகாசமும், அதன் நடுவில் இருந்து விளங்கிய சொகுசாவின் நிறம் உண்டாயிருந்தது. அதின் நடுவிலிருந்து நாலு ஜீவன்கள் தோன்றினாலும், அவைகளின் சாயல் மனுஷ சாயலாயிருந்தது. அவைகளுக்கு நான்கு முகங்களும், நான்கு செட்டைகளும் இருந்தன. அவைகளுக்கு கால்கள் நிமிர்ந்த கால்களாயிருந்தன. அவை களுடைய உள்ளங்கால்கள் கன்றுக் குட்டியின் கால்களுக்கு ஒப்பாயிருந்தது. அவைகள் துலக்கப்பட்ட வெண்கலத்தின் வருணமாய் மின்னிக் கொண்டிருந்தது. அவைகள் ஒவ்வொன்றும் தன் தன் திசைக்கு நேர்முகமாய் சென்றன. ஆவி போக வேண்டுமென்றிருந்த எவ்விடத்துக்கும் அவைகள் போயின. போகையில் அவைகள் திரும்பி பார்க்கவில்லை. ஜீவனுடைய சாயல் எப்படி இருந்ததென்றால் அவைகள் எரிகிற அக்கினியின் தோற்றமும் தீவெட்டியின் தோற்றமுமாயிருந்தது. அந்த அக்கினி வண்ணங்களுக் குள்ளே உலாவி பிரகாசமாயிருந்தது. அக்கினியி லிருந்து மின்னல் புறப்பட்டது. அந்த ஜீவன்கள் மின்னலின் தோற்றம் போல் ஓடிந்திருந்தன. தேவப்பிள்ளைகளின் அனுபவங்களை அந்த ஜீவன்களுக்குள்ள அனுபவமாய் மாற வேண்டும். ஆவி போக வேண்டும் என்றிருந்த இடம் போகிறது. இது ஆவியானவரின் நடத்துதலின் அனுபவத்தைக் காட்டுகிறது. அந்த அக்கினி ஜீவன்களுக்குள்ளே உலாவி பிரகாசமாயிருந்தது போல அப்போஸ்தலனாகிய பவுல் கொரிந்து சபைக்கு சொல்லும்

போது நான் அவர்களுக்குள்ளே உலாவி வாசம் பண்ணி, அவர்கள் தேவனாயிருப்பேன். 2 கொரி. 3:17,18 பார்க்கும் போது, கர்த்தரே ஆவியானவர்; கர்த்தருடைய ஆவி எங்கேயோ அங்கே விடுதலையுமுண்டு. நாமெல்லாரும் திறந்த முகமாய்க் கர்த்தருடைய மகிமையை கண்ணாடியிலே காண்கிறது போலக் கண்டு, ஆவியாயிருக்கிற கர்த்தரால் அந்தச் சாயலாகத் தானே மகிமையின் மேல் மகிமையடைந்து மறுரூபப்படுகிறோம். இயேசுவின் சாயலைப் பார்க்கும் போது, எசேக்கியேல் கண்ட ஜீவன்களுடைய சாயலைப் பேரல் அல்ல அவருடைய சமூகம் வல்லமையாய் பிரகாசிக்கிற சூரியனைப் போலிருந்தது. அவருடைய சிரசும் வெண் பஞ்சைப் போல் வெண்மையாயிருந்தது. அவருடைய கண்கள் அக்கினி ஜுவாலையைப் போல் இருந்தது. அவருடைய பாதங்கள் உலைக்களத்தில் காய்ந்த பிரகாசமான வெண்கலம் போலிருந்தது. அவருடைய சத்தம் பெருவெள்ளத்தின் இரைச்சலைப் போலிருந்தது. வெளி. 1:13-16. இந்த ஜீவன்கள் மேலுள்ள மண்டலத்தின்மீதில் நீலரத்தினம் போல விளங்கும் ஒரு சிங்காசனத்தின் சாயலும், அந்த சிங்காசனத்தின் சாயலின் மேல் மனுஷ சாயலுக்கு ஒத்த ஒரு சாயலும் இருந்தது. அவருடைய இடுப்பாகக் காணப்பட்டது முதல் மேலெல்லாம் உட்புறம் சுற்றிலும் அக்கினிமயமான சொகுசாவின் நிறமாயிருக்கக் கண்டேன். அவருடைய இடுப்பாகக் காணப்பட்டது முதல் கீழெல்லாம் அக்கினிமயமாகவும் அதைச் சுற்றிலும் பிரகாசமாகவும் இருக்கக் கண்டேன். மழைபெய்யும் நாளில் மேகத்தில் வானவில் எப்படிக் காணப்படுகிறதோ, அப்படியே சுற்றிலுமுள்ள அந்தப் பிரகாசமும் காணப்பட்டது. இதுவே கர்த்தருடைய மகிமையின் சாயலுக்குரிய தரிசனமாயிருந்தது. அதை நான் கண்ட போது முகங்குப்புற விழுந்தேன் எசே.1:26-28. யோவான் அப்போஸ்தலரும் இயேசுவைக் கண்ட போது பயந்து முகங்குப்புற விழுந்து

செத்தவனைப் போல் அவருடைய பாதத்தில் விழுந்தான் வெளி. 1:17. பிரியமானவர்களே, இதை நாம் பார்க்கும் போது, நாம் எவ்வளவோ பரிசுத்தம் அடைய வேண்டியவர்களாயிருக்கிறோம். பரிசுத்தம் இல்லாமல் ஒருவரும் கர்த்தரைத் தரிசிப்பதில்லையே. இயேசுவின் பூரண சாயலை பெற்றுக் கொண்டவர்கள் இயேசுவோடு இருப்பார்கள். உலக பிரகாரம் நாம் பார்க்கும் போது, மரித்துப் போன லாசருவை எழுப்பினார். அவன் வெளியே வந்த போது, அவன் கை, கால்களும் கட்டப்பட்டிருந்தது. முழுவதும் சீலையால் சுற்றப்பட்டிருந்தது. இயேசு நின்றவர்களைப் பார்த்து, இவனைக் கட்டவிழ்த்து விடுங்கள் என்று கூறிய பின்னே நடக்கிறான். இதேப் போல் ஆவிக்குரிய அனுபவத்தில் அநேகர் செத்த கிரியைகளால் கட்டிப்போடப்படுகிறார்கள். இவர்களுக்கு ஆத்துமாவில் ஜீவன் இருந்தாலும் கட்டப்பட்ட ஜீவனாயிருக்கிறது. இப்படிப்பட்டவர்கள் பிரவேசிக்க முடியாது. ஆவியில் விடுதலையோடு ஆராதிக்க முடியாது, ஜெபிக்க முடியாது, விடுதலையோடு ஒன்றும் செய்ய முடியாது, ஆவியானவர் எங்கே உண்டு அங்கே விடுதலை உண்டு. சத்தியத்தை அறிவீர்கள், சத்தியம் உங்களை விடுதலையாக்கும் என்றார் யோவா. 8:32. ஜெபத்தினால் கட்டுகள் அறுக்கப்படுகிறது, அப்போதுதான் கர்த்தருக்காக விடுதலையோடு ஊழியம் செய்ய முடியும். கர்த்தர் சீயோன் குமாரத்தியைப் பார்த்து உன் கழுத்திலுள்ள கட்டுகளை அவிழ்த்து விடு. காத்திருந்து புது அபிஷேகம் பெற்றுக் கொள்ளும் போது எல்லா கட்டுகளும் அறுக்கப்பட்டு, கழுகைப் போல் செட்டை அடித்து எழும்பு கிறார்கள். அவர்கள் ஓடினாலும் இளைப்படையார்கள். நடந்தாலும் சோர்ந்து போகார்கள். இது ஆவியில் பறந்து போகிற அனுபவம் ஏசா. 40:3. இயேசு பிரதியுத்தரமாக ஒரு மனுஷன் எருசலேமி லிருந்து எரிகோவுக்கு போகையில் கள்ளர் கையில் அகப்பட்டுக் கொண்டான். அவன்

வஸ்திரங்களை உரிந்து கொண்டு அவனை காயப்படுத்தினார்கள். குற்றுயிராக விட்டு போனார்கள். சமாரியன் ஒருவன் வந்து அவன் உயிரைக் காப்பாற்றுகிறான். ஒரு சத்திரத்தான் கையில் ஒப்படைக்கிறான். ஆவிக்குரிய அனுபவத்தில் சிலர் ஜெபம் பண்ணாமலும், ஆராதனையில் பங்கெடுக்காமலும், வேத வசனம் கேட்காமலுமிருந்து குற்றுயிராய்ப் போகிறார்கள். ஆவியினாலே ஆரம்பம் பண்ணின நீங்கள் இப்பொழுது மாம்சத்திலே முடிவு பெறுகிறீர்கள் கலா.3:3. சிலர் ஆவி இல்லாமல் குற்றுயிராய் போகிறார்கள் எபே. 5:14. சர்தை சபையைப் பார்த்து கர்த்தர் சொல்லும் போது, உன் கிரியைகளை அறிந்திருக்கிறேன் நீ உயிருள்ளவன் என்று பெயர் கொண்டிருந்தும், செத்தவனாயிருக்கிறாய். நீ விழித்துக் கொண்டு சாகிறதுக்கேதுவானவைகளை ஸ்திரப்படுத்து. உன் கிரியைகள் தேவனுக்குள் நிறைவுள்ளதாயிருக்கிறது வெளி 3:1-2. இவர்கள் ஆத்தும ஜீவனை தேற்ற வேண்டுமானால் அவர்கள் அப்போஸ் தலருடைய உபதேசத்திலும், அந்நியோந்நியத்திலும், அப்பம் பிட்குதலிலும், ஜெபம் பண்ணுவதிலும் உறுதியாய் தரித்திருந் தார்கள் அப். 2:42. சத்திரம் ஆலையத்தை குறிக்கிறது. ஊழியக்காரர் ஜீவனைக் காப்பாற்ற உத்திரவாதம் இருக்கிறது. பவுல் சொல்லும் போது உங்களிடத்தில் பட்சமாய் நடந்து கொண்டோம். பால் கொடுக்கிற தாயானவள் தன் பிள்ளைகளைக் காப்பாற்றுவது போல, தேவனுடைய சுவிசேஷத்தை உங்களுக்கு கொடுப்பது மல்லாமல் நீங்கள் எங்களுக்கு பிரியமானவர்கள் என்பதினால் எங்களையும் கொடுக்க மனதாயிருந்தோம் 1 தெச. 7:8 -ம். சுகபோகமாய் வாழ்கிறவன் உயிரோடே செத்தவள் 1 தீமோ. 5:6. சொகுசான வாழ்க்கையைத் தான் அதிகமாக நாடுகிறார்கள். ஆவிக்குரிய வாழ்க்கைக் குன்றிப்போகிறதாயிருக்கிறது. இன்றைக்கு அனேகர்

ஆத்தும ஜீவனை கவனிக்கிறதில்லை. இயேசு சொல்லும் போது, நீங்களோ உன்னதத்திலிருந்து வரும் பெயரை தரிப்பிக்கப்படும் வரைக்கும் எருசலேம் நகரத்தில் இருங்கள் என்றார் ஏசா. 4:4 -ல் சீயோனில் மீதியாயிருந்து, எருசலேமில் தரித்திருந்து ஜீவனுக்கென்று பேரெழுதப்பட்ட வனெவனும் பரிசுத்தனென்று சொல்லப்படுவான். ஆயிரம் வருஷம் ஆட்சிசெய்வார்கள் ஜீவனுக்கு என்று பேர் எழுதப்பட்டவர்கள். அவர்கள் பரிசுத்தவான்கள். முன்னே ஜீவன் பெற்று அந்த ஜீவனை இழந்துப் போகிறவர்கள் பேர் கிறுக்கப்பட்டுப் போகிறது. அவன் நாமமும் கிறுக்கப்பட்டுப் போகிறது. பவுல் அப்போஸ்தலர் எபேசியருக்கு 4 அதிகாரம் 17, 18 -ல் சொல்லும் போது, புற ஜாதிகள் தங்கள் வீணான சிந்தையில் நடக்கிறது போல நீங்கள் வீணான சிந்தையில் இனி நடவாமலிருங்கள். அவர்கள் புத்தியில் அந்தகாரப்பட்டு தங்கள் இருதய கடினத்தினால் தங்களில் இருக்கும் அறியாமையினால் தேவனுடைய ஜீவனுக்கு அந்நியராய் போகிறார்கள். நித்திய ஜீவனுக்கு அந்நியராயிருக் கிறார்கள். எவ்வளவு பரிதாபம்? நித்திய ஜீவனைக் காப்பாற்ற ஜாக்கிரதையயயிருக்க வேண்டும். தேவ பிள்ளைகள் ஜீவன் பெருக வேண்டுமானால் ஒரு மனம் ஆவியின் இருதயம் வேண்டும். அப்போஸ்தலனாகிய பவுல் சொல்லும் போது, 1 கொரி. 12:12-ல் எப்படியெனில், சரீரம் ஒன்று, அதற்கு அவயவங்கள் அநேகம்; ஒரே சரீரத்தின் அவயவங்களெல்லாம் அநேகமாயிருந்தும், சரீரம் ஒன்றாகவேயிருக்கிறது; அந்தப்பிரகாரமாகக் கிறிஸ்துவும் இருக்கிறார். சரீரத்தில் பிரிவினை உண்டாயிராமல் சரீரத்தை வைத்திருக்கிறார். நீங்களே கிறிஸ்துவின் சரீரமாயும் தனித் தனியாக அவருடைய அவயவங்களுமாயும் இருக்கிறீர்கள். கணுக்களாலும் கட்டுகளாலும் உதவி பெற்று இணைக்கப்பட்டு தேவ வளர்ச்சியாய் வளர்ந்தேறுகிற சரீரம்

முழுவதையும் ஆசரிக்கிற தலையைப் பற்றிக் கொள்ளாமல் மாமிச சிந்தையிலே போகிறவர்கள் வீணாய் இறுமாப்பு கொண்டிருக்கிற எவனும் உங்கள் பந்தயப் பொருளை நீங்கள் இழந்து போகும் படி உங்களை வஞ்சிக்காதிருக்கப் பாருங்கள். இந்த சரீரம் கணுக்களாலும் கட்டுகளாலும் இசைந்து இருப்பது போல சபையில் பிரிவினைகள் இல்லாமல் இசைந்த ஆத்துமாக்களும் காணப்படும் போது ஆவிக்குரிய ஜீவன் வளர்ந்து பெருகி வருகிறது. ஜீவிக்கும் கிறிஸ்து தலையாயிருக்கிறார். கிறிஸ்துவின் சரீரம் முழுவதும் வியாபரிக்கும் ஜீவன் வளர்ச்சி அடைகிறது. கணுக்களாலும், கட்டுகளாலும் உள்ள இசைவு யாருக்கு இல்லயோ அவர்களுடைய ஆத்துமீக ஜீவன் குற்றுயிராய்க் காணப்படும்.

ஆத்தும ஜீவனில் தேவனுடைய பெலன் :

அதனால் தான் யோவான் அப்போஸ்தலர் சொல்லும் போது, எங்களுடைய ஐக்கியம் பிதாவோடும், அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவோடும் இருக்கிறது. 1 யோவா 1:3. தம்முடைய குமாரனும் நம்முடைய கர்த்தருமாயிருக்கிற இயேசு கிறிஸ்துவுடனே ஐக்கியமாயிருப் பதற்கு உங்களை அழைத்த தேவன் உண்மையுள்ளவர். 1 கொரி. 1:9 இவை எல்லாவற்றின் மேலும் பூரண சற்குணத்தின் கட்டாகிய அன்பைத் தரித்துக் கொள்ளுங்கள். தேவ சமாதானம் உங்கள் இருதயங்களில் ஆளக்கடவது. இதற்கென்றே நீங்கள் ஒரே சரீரமாக அழைக்கப் பட்டீர்கள் நன்றியறிதலுள்ளவர்களாயும் இருங்கள். கொலோ. 3:15 இவ்விதமான அழைப்பு பெரும் பாக்கிய மாயிருக்கிறது. ஆனால் இந்த அழைப்பை மேன்மையாய் சிந்திக்கிறதில்லை. நாம் பிதாவோடும், குமாரனோடும் பரிசுத்தாவியோடும் சபையோடும் ஐக்கியமாயிருக்கும் போது தான் ஆத்மீக ஜீவன் பூரணமாக விரும்புகிறார். சர்ப்பமாகிய பிசாசின் கைக்கு தப்பும்படி மரணம்

நெருகிறதாயிருந்தாலும் ஆட்டுக் குட்டியானவருடைய இரத்தத்தினாலும் தங்கள் சாட்சியின் வசனத்தினாலும் அவனை ஜெயித்தார்கள் வெளி 12:11. நித்திய ஜீவனைப் பற்றிக் கொள் அதற்காகவே அழைக்கப்பட்டாய் 1 தீமோ. 6:12. ஆத்துமாவின் செயலான ஜீவன் இல்லாவிட்டால் ஆவிக்குரிய ஜீவிதத்தில் சோர்வும், ஆத்துமாவுக்கு களைப்பும் வருகிறது. கிறிஸ்தவ ஜீவிதத்தின் நெருக்கங்கள். இடுக்கண்கள் துன்பங்கள் பாடுகள் வரும். பவுல் அப்போஸ்தலர் நாங்கள் எப்பக்கத்திலும் நெருக்கப்பட்டும் ஒடுங்கிப்போகிறதில்லை. கலக்கம் அடைந்தும் மனமுறிவு அடைகிறதில்லை. துன்பப்படுத்தப்பட்டும், கைவிடப்படுகிறதில்லை. கீழே தள்ளப்பட்டும் மடிந்து போகிறதில்லை 2 கொரி. 4:8. இந்த நியமத்தில் இயேசுவின் ஜீவன் விளங்கி பெலன் செய்கிறது. ஆகையால் சொல்லுகிறார் நாங்கள் சோர்ந்து போகிறதில்லை. எங்கள் புறம்பான மனுஷனானது அழிந்தும் உள்ளான மனுஷனானது நாளுக்கு நாள் புதிதாக்கப் படுகிறது 2 கொரி. 4:16. ஆகையால் நீங்கள் இளைப்பு உள்ளவர்களாய் உங்கள் ஆத்துமாக்களில் சோர்ந்து போகாதபடிக்கு தமக்கு விரோதமாய் பாவகளால் செய்யப்பட்ட இவ்விதமான விபரீதங் களை சகித்த அவரையே நினைத்துக் கொள்ளுங்கள் எபி. 12:3. புதிய வல்லமை பெற்றுக் கொள்ளும் போது சோர்வில்லாமல் இளைப்பு இல்லாமலிருக்க ஆவிக்குரிய ஓட்டத்தில் ஓடிக் கொண்டிருக்கலாம்.

நான்கு ஜீவன்கள் :

வெளி. 4:7,8,9 பார்க்கும் போது நாலு ஜீவன்களைப் பற்றி சொல்லப் படுகிறது. அந்த நான்கு ஜீவன்களிலும் ஒவ்வொன்றும் அவ்வாறு சிறகு உள்ளவைகளும் சுற்றிலும் உள்ளதும் கண்களால்

நிறைந்தவைகளுமாயி ருந்தன. அவை இருந்தவைகளும், இருக்கிறவைகளுமாகிய சர்வ வல்ல மையுள்ள தேவனாகிய கர்த்தர். பரிசுத்தர் பரிசுத்தர் பரிசுத்தர் என்று இரவும் பகலும் ஓய்வில்லாமல் சொல்லிக் கொண்டிருந்தன. மேலும் சிங்கா சனத்தின் மேல் வீற்றிருந்து. சதாகாலங்களிலும் உயிரோடு இருக்கிறவருக்கு அந்த ஜீவனங்கள் மகிமையும், கனத்தையும், ஸ்தோத்திரத்தையும் செலுத்திக் கொண்டிருக்கிறது. இதை நாம் பார்க்கும் போது அல்லேலூயா தேவனை அவருடைய பரிசுத்த ஸ்தலத்தில் துதியுங்கள் சுவாசமுள்ள யாவும் கர்த்தரைத் துதியுங்கள். துதியைப் பற்றிய மேன்மையை சங் 148:1-14, 150:1-6 வரை சொல்லப்பட்டிருக்கிறது. என் வாய் துதியினாலும் நாள்தோறும் உமது மகத்துவத்தினாலும் நிறைந்திருப்பதாக. சங். 71:8 உம்முடைய பரிசுத்தவான்கள் உம்மை ஸ்தோத்தரிப்பார்கள். வெளி 7-ம் அதிகாரத்தை பார்க்கும் போது, இவைகளுக்கு பின்பு நான் பார்த்த போது இதோ சகல ஜீவன்களிலும், கோத்திரங் களிலும் ஜனங்களிலும் பாஷைக் காரரிலுமிருந்து வந்ததும் ஒன்றும் எண்ணக்கூடாததுமான ஜனங்கள் அங்கிகளைத் தரித்து தங்கள் கைகளில் குருத்தோலைகளை பிடித்து சிங்காசனத்திற்கு முன்பாகவும் ஆட்டுக்குட்டியான வருக்கு முன்பாகவும் நிற்கக் கண்டேன். அவர்கள் மகா சத்தமிட்டு இரட்சிப்பின் மகிமை சிங்காசனத்தின் மேல் வீற்றிருக்கிற எங்கள் தேவனுக்கும், ஆட்டுக் குட்டியானவருக்கும் முன்பாக மகிமை உண்டாவதாக என்று ஆர்ப்பரித்தார்கள். தூதர்கள் யாவரும் சிங்காசனத்தையும், மூப்பர்களையும் நான்கு ஜீவன்களையும் சூழ நின்று சிங்காசனத்திற்கு முன்பாக முகங்குப்புற விழுந்து தேவனைத் தொழுது கொண்டு, ஆமென் எங்களுக்கு துதியும், மகிமையும்,

ஞானமும் ஸ்தோத்திரமும், கனமும், வல்லமையும் பெலனும் சதாகாலங்களிலும் உண்டாவதாக ஆமென் என்றார்கள் வெளி 7:9 ஜீவன்களுடைய வரிசையை பார்க்கும் போது, சேனைகளின் கர்த்தர் பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர் என்று சொல்லும் போது பூமி அனைத்தும் மகிமையால் நிறைந்திருக்கிறது. பூமி எல்லாம் கர்த்தருடைய மகிமையையினால் நிறைந்திருக்கும் என்று என்னுடைய ஜீவனைக் கொண்டு சொல்லுகிறேன் எண். 14:21.

நான்கு ஜீவன்கள்

வெளி 4:6 பார்க்கும் போது, நான்கு ஜீவன்களைப் பற்றி சொல்லப்படுகிறது. அந்த சிங்காசனத்திற்கு முன்புாகப் பளிங்குக் கொப்பான கண்ணாடிக்கடலிருந்தது; அந்த சிங்காசனத்தின் மத்தியிலும் அந்த சிங்காசனத்தைச் சுற்றிலும் நான்கு ஜீவன்களிருந்தன, அவைகள் முன்புறத்திலும் பின்புறத்திலும் கண்களால் நிறைந்திருந்தன. இவைகள் கர்த்தருக்குரிய கனத்தையும், ஸ்தோத்திரத்தையும் செலுத்துகிறது. பின்னும் நான் பார்த்த போது சிங்காசனத்தையும், ஜீவன்களையும், மூப்பர்களையும் சூழ்ந்திருந்த அநேக தூதர்களுடைய சத்தத்தைக் கேட்டேன். அவர்களுடைய இலக்கம் பதினாயிரம் பதினாயிர மாகவும் ஆயிரமாகவும் இருந்தது. அவர்களும் மகா சத்தமிட்டு, அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியானவர் வல்லமையும், ஐக்கியத்தையும், ஞானத்தையும் பெலத்தையும் ஜனத்தையும் மகிமையையும் ஸ்தோத்திரத் தையும் பெற்றுக் கொள்ள பாத்திரராயிருக்கிறார் என்று சொன்னார்கள். ஆயிரம் வருட ஆட்சியைப் பார்க்கும் போது நான் சிருஷ்டிக்கிறதினாலே நீங்கள் என்றைக்கும் மகிழ்ந்து களிகூர்ந்திருங்கள். இதோ எருசலேமை களி கூருவதாகவும் அதின் ஜனத்தை மகிழ்ச்சியாகவும்

சிருஷ்டிக்கிறேன். நான் எருசலேமின் மேல் களிகூர்ந்து என் ஜனத்தின் மேல் மகிழ்ச்சியாயிருப்பேன்.

வெளிச்சமாய் இருக்கும் :

கேரூபின்களுடைய வரிசையைப் பார்க்கிலும் இந்த கேரூபின்களும் கர்த்தருடைய மகிமையை சார்ந்து செல்கிறது எசே. 10:4 இந்நாட்களில் ஊழியங்களும் விசுவாசிகளும் இயேசுவின் ஜீவன் பெற்று மகிமையை சுமந்து செல்கிறவர்களாய் காணப்பட வேண்டும். தேவனுடைய சாயலாய் இருக்கிற கிறிஸ்துவின் மகிமையான ஜீவிதத்தை அறிந்திருக்கிறவர்களாய்க் காணப்பட வேண்டும். மகிமையுள்ள ஆராதனை செய்ய வேண்டும். மகிமையுள்ள சபைக்காய் தன்னை ஒப்புக் கொடுத்தார். கறை திரை முதலானவைகள் ஒன்றும் இல்லாமல் பரிசுத்தமும் பிழையற்றதுமான மகிமையுள்ள சபையாய் தமக்கு முன் நிறுத்த வேண்டும் எபே. 5:7 இந்த சரீரத்தில் பூரண ஜீவனும், பூரண மகிமையும் அடைந்தாலே மகிமையடைந்த நகரத்தில் சதாகாலம் வாசம் செய்வார்கள். இந்த சம்பவத்தைப் பார்க்கும் போது ஆவி ஜீவனுள்ளதாய்க் காணப்படும். இயேசுவின் ஜீவன் மனுஷருக்கு ஒளியாயிருந்தது போல இவர்களும் உலகத்துக்கு ஒளியாய் இருக்கிறார். இயேசுவும் அதை சொல்கிறார். நீங்கள் உலகத்துக்கு வெளிச்சமாய் இருக்கிறீர்கள் மத். 5:14.

ஜீவஊற்று என்று செல்கிறார்இயேசு சிலுவையில் ஜீவனைக் கொடுத்து பெரிய காரியத்தை தம்முடைய பிள்ளைகளுக்கு வைத்திருக் கிறார். நாம் யாவரும் இந்த பாக்கியத்தைப் பெற்று அனுபவிக்க வேண்டும். நீதிமானுடைய வாய் ஜீவ ஊற்று ஞானவான்களுடைய போதகம் ஜீவ ஊற்று. இருதயத்தை காத்துக் கொள்ளும் போது, ஜீவ ஊற்று புறப்படும்.

என்னிடத்தில் விசுவாச மாயிருக்கிறவன் எவனோ அவன் உள்ளத்திலிருந்து ஜீவத் தண்ணீருள்ள நதிகள் ஓடும் என்றார். நதி என்று சொல்லாமல், நதிகள் என்று சொல்லப்படுகிறது. ஒருவரிடத்தில் நதிகள் ஓடும் போது அது எவ்வளவோ பிரயோஜனப்படுகிறது. எசே. 47:9-ல் சொல்லப்படுகிறது சம்பவிப்பது என்னவென்றால் இந்த நதி போகுமிடமெங்கும் சஞ்சரிக்கும் ஜீவ பிராணிகள் யாவும் பிழைக்கும். இயேசு சொல்லும் போது நான் அவனுக்குக்குள்ளே நித்திய ஜீவ காலமாய் ஊறுகிற நீரூற்றாயிருக்கும் என்றார். நித்திய ஜீவகாலம் என்று சொல்லும் போது இந்த உலகத்துக்கும் மறுமைக்கும் போதுமானதாயிருக்கிறது யோபு 4:14.

ஜீவத் தண்ணீர் :

கர்த்தர் சில காவியங்களைச் சொல்லுகிறதைப் பார்க்கிறோம். பசியுள்ளவனிடத்தில் ஆத்துமாவை சாய்த்து சிறுமைப்பட்ட ஆத்துமாவை திருப்தியாக்கினால் அப்பொழுது இருளில் உன் வெளிச்சம் உதித்து உன் அந்தகாரம் மத்தியானத்தைப் போல் ஆகும். கர்த்தர் நித்தமும் உன்னை நடத்தி மகா வறட்சியான காலங்களில் உன் ஆத்துமாவைத் திருப்தியாக்கி உன் எலும்புகளை நிணமுள்ளதாக்குவார். நீர்ப்பாய்ச்சலான தோட்டத்தைப் போலவும், வற்றாத நீரூற்றைப்போலவும் இருப்பார். ஆவிக்குரிய வாழ்க்கை எவ்வளவு மேன்மையாயிருக்கிறது. வசனத்தை கைக்கொள்ளாமலும், கீழ்ப்படியாமலும் போய் சீஷனுடைய வாழ்க்கை வறட்சியடைந்து போகிறது. அநேகருடைய ஊற்றுக்கள் வற்றிப் போகிறதை சிலர் ஜீவத்தண்ணீராய் அவரை விட்டுவிட்டார்கள் எரே. 2:13.

ஆயத்தம் :

ஜீவ வழியை தெரிந்து கொண்டு நடக்கிறவன் அவனுடைய பார்வை உன்னதத்தை நோக்கியிருக்கிறது. மேலான காரியங்களைச் சிந்திக்கிறார்கள். பவுல் அப்போஸ்தலன் சொல்லும் போது, நம்முடைய குடியிருப்போ பரலோகத்தில் இருக்கிறது, அங்கேயிருந்து கர்த்தராகிய இயேசு கிறிஸ்து என்னும் இரட்சகரை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறோம் பிலி. 3:20.

இயேசு சொல்லும் போது, மார்த்தாளிடத்தில் சொல்கிறார் நானே உயிர்த்தெழுதுலும் ஜீவனுமாயிருக்கிறேன். நம்முடைய ஜீவனாகிய கிறிஸ்து வெளிப்படும் போது நீங்களும் அவரோடுகூட மகிமையில் வெளிப்படுவீர்கள். நானோ அவைகளுக்கு ஜீவன் உண்டாயிருக்கவும் அவைகள் பூரண்ப்படவும் வந்தேன் என்கிறார். பூரணப்பட்ட பரிசுத்தவான்கள் இரகசிய வருகையில் எடுத்துக் கொள்ளப்பட்டு எப்போதும் இயேசுவோடு கூட சதாகாலங்களிலும் இருப்பார்கள். இதற்காக நாம் யாவரும் ஆயத்தப்படுவோம்.

கர்த்தர் நம் யாவரையும் ஆசீர்வதிப்பாராக

எமது இதர வெளியீடுகள்

- நிழலும் பொருளும் ஈசாக்கும் ரெபேக்காளும்
- உத்தமி
- மகிமை அடைந்த எருசலேம்
- ஆபிரகாமின் விசுவாசம்
- பிரதிபலன்
- கர்த்தருடைய வருகையில் எடுத்துக்கொள்ளப்பட என்னென்ன தகுதிகள் வேண்டும்
- தேவ சித்தம் செய்தல்

புத்தகங்கள் கிடைக்குமிடம்

Full Gospel Literature Service Centre
Kadamalaikuntu
P.B - 3, Mekkamandapam
K.K. Dist - 629 166
(04651) 252756 / 252856
(or)
Pastor. J. Lazer
Full Gospel Pentecostal Church
Theruvilai, Mathoor
Aruvikkarai P.O., K.K. Dist - 629 177
Ph : (04651) - 283144

ஆசிரியரைப்பற்றி....

பாஸ்டர் J. லாசர் அவர்கள் 1923 ம் வருடம் டிசம்பர் 17 ம் நாள் கிறிஸ்தவ பெற்றோருக்கு பிறந்தார். இவரது சொந்த ஊர் மாத்தூர் ஆகும். 12 வயதிலே கர்த்தர் தரிசனமாகி இவரை ஊழியத்திற்கு அழைத்தார்.

55 வருடங்களாக இந்தியாவின் பல பகுதிகளுக்கு சென்று கர்த்தருடைய ஊழியத்தை செய்து வருகிறார்கள். வேதத்தில் மறைந்திருக்கிற பல சத்தியங்களையும் கர்த்தர் இவருக்கு வெளிப்படுத்திக் கொடுத்திருக்கிறார்.

இவரது போதனைகளை கேட்ட பலர் இவர்களை புத்தகங்களாய் வெளியிட்டால் அனேகருக்கு பிரயோஜனமாக இருக்கும் என்று கேட்டுக் கொண்டதால் இந்த சிறு நூல் வெளியிடப்பட்டது. இது படிக்கிற யாவருக்கும் ஆசீர்வாதமாயிருக்க கர்த்தர் கிருபை செய்வாராக.